605

ஓம்

ஞானசாகரம்

(அறிவுக்கடல்)

இஃது

இருபத்தாறு ஆண்டுகளாக நடைபெறுந்

தனிச் செந்தமிழ் வெளியீடு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
1 FEB 1929
MADRAS

பதி, ௧௬.] விபவ௵ ஆவணி, புரட்டாசி௴ [இதழ், ௫, ௯.

பொருளடக்கம்

மாணிக்கவாசகர் காலம், மூன்றாம்பகுதி முற்றியது.

(The Age of Saint Manickavachakar, the third part–reviews all the arguments that have appeared for the last 16 years and finally fixes his age in the third century A. D.)

ஆசிரியர்:
மறைமலையடிகள் என்னும்
ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,
பொதுநிலைக்கழக குரு,
பல்லாவரம்

பல்லாவரம், பொதுநிலைக்கழக நிலையத்தின்கண் உள்ள
டி. எம். அச்சுக்கூடத்திற்
பதிப்பிடப்பட்டது;

30th Jan., 1929.

ஒருபதுமக் கையொப்பம்] [நான்கு ரூபா

All Rights Reserved.

ஓம்

ஞானசாகரக் கையொப்ப நண்பர்க்கு

மாணிக்கவாசகர் வரலாறுங்காலமும் என்னும்நூலின் பொருளடக்கம் முழுதும் இவ்விரண்டிதழ்களில் முடிந்தது. இனி, அடுத்து வரும் இதழ்களில் அந்நூலுக்குரிய தமிழ் ஆங்கில முகவுரைகளும், நூல்முகப்பும், நூலாசிரியர் உருவப்படமும் வெளிவரும்; அவைவெளிவந்த பிறகே எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து அன்பர்கள் கட்டிடஞ் செய்துகொள்ளல்வேண்டும்.

ஞானசாகரப் பதினோராம் பதுமத்திலிருந்து கையொப்பஞ் செய்திருக்கும் அன்பர்களுக்கு மாணிக்கவாசகர் வரலாற்றில் முதல் 64பக்கங்கள் குறைவுபடும். அவர்கள்பொருட்டு 64பக்கங்களும் திரும்பஅச்சிடப்படுகின்றன. அவைவேண்டும் அன்பர்கள் நமக்கு உடனேதெரிவித்து அவற்றை வி. பி. தபால் வழியாகப் பெற்றுக்கொள்வார்களாக. அவ் 64பக்கங்களின்விலை தபாற் கூலியுட்பட ஒருரூபா நான்கணா.

இதழாசிரியர்

ஓம்

சைவசயயத்தின் நெருக்கடியான நிலை (முன்றொடர்ச்சி)

(மறைமலையடிகள் எழுதியது)

போரில் இறந்துபட்ட தம்மவர்சிலரின் ஆவிகளை இந்திரன், வருணன், அதிதி, பூஷன், இயமன், உஷாக்கள், அசுவினிகள், ரிபுக்கள், பிதிர்க்கள் என்னும்பெயரால் தமக்கு வெற்றியுண்டாகும் பொருட்டு வணங்கி வேண்டிவந்ததுடன், அவற்றிற்கு ஆடு மாடு எருமை குதிரை முதலான விலங்குகளையும் போரிலகப்பட்டமக்களையும் ஆயிரக்கணக்காய்க் கொலைசெய்து வெறியாட்டுவேள்விகள் எடுத்து மிகக்கொடியராயும் ஒழுகினவர்கள். இவர்கள் தாமெடுத்த வெறியாட்டு வேள்விகளில், மேற்குறித்த பேய்வடிவங்களின் மேற் றமது ஆரியமொழியிற் பாடிய பூசாரிப்பாட்டுகளே இக்காலத்தில் இருக்குவேதம் எசுர்வேதம் சாமவேதம் அதர்வவேதம் எனவழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாரியர்கள் இவ்விந்தியநாட்டின் வடமேற்கெல்லைவழியாய் இதனுட்புகுந்தகாலத்தில், இதன்வடநாடுகளில் மிக்கசிறப்புடன் வாழ்ந்த தமிழர்களை முதலில் எதிர்த்துப்பார்த்துப், பிறகு அது தமக்கு வெற்றிதாராமையின், அவர்களொடு நட்புக்கொண்டு, அவ்வழியே தமிழ்மக்களைத் தம்வலையுள் அகப்படுத்துவாராயினர். அந்நாளில் தாம் கொணர்ந்த ஆரியச்சிறுதெய்வப்பாட்டுகளைத், தமிழரிற் சிறந்த சான்றோர் உதவிகொண்டு நான்குதொகுப்பாக்கி, அவைதமக்கு 'வேதம்' என்னும்பெயரையுஞ் சூட்டிவிட்டனர். இங்ஙனந் தமிழ்ச்சான்றோர்கள் ஆரியச்சிறுதெய்வப்பாட்டுகளைத் தொகுத்து நால்வகையாகப்பகுத்தகாலத்தில், தமிழ்த்தெய்வமாகிய 'உருத்திர சிவன்' மேற் றாம் இயற்றிய சிலசெய்யுட்களையும் ஆங்காங்கு உடன்சேர்த்து, அந்நூல்கட்குச் சிறப்புத்தந்தனர். தந்துமென்! ஆரியர்கள் சிறுதெய்வவணக்கத்தினுங் குடி கொலை சூது முதலிய தீவினைகளினும் மிகப்பழகிவிட்டமையின், தமிழ்ச்சான்றோர் காட்டிய முழுமுதற் கடவுளான சிவபிரான்வணக்கத்தைச் சிறிதும் எற்றாரல்லர். இதற்கு, இக்கால ஆரியப்பார்ப்பனர்தம் ஒழுகலாறேசான்றாம்; இவர்கள் எத்தகைய சிறுதெய்வத்தையும் வணங்குவர்; எத்தகைய மதத்தையும் பின்பற்றுவர்; ஆனாற், சிவபிரானைமட்டும் வணங்கார்; சைவவொழுக்கத்தையும் பின்பற்றார். இத்தன்மையரான ஆரியமக்களின் சிறுதெய்வப்பாட்டுகளும், அவர்தம் வெறியாட்டு வேள்விகளின் ஆரவாரவுரைகளுமே பெரும்பாலும் நிரம்பிய இருக்கு எசுர் சாமம் அதர்வம் முதலிய ஆரியநூல்களைச் சிவபெருமான் அருளிச்செய்த வேதங்களாகக்கொண்டு, இப்போலியுரையை அழுத்தமாய்க் கூறுதலிற் போலிச்சைவர்கள் முனைந்துநிற்கின்றார்கள். இவர்தம் இப்போலியுரையை யெடுத்துக்கொண்ட பிறர், 'கொலைகுடிமலிந்த இக்கொடிய ஆரியநூல்கள் தாம் நம்சைவவேதங்களோ! இவற்றைச்சொன்ன

உண்மைகாணும் வேட்கையுடையார் இன்னாரென்பது, 156. எல்லாமக்கட்கும் உடம்பாடான கொள்கைகள்மேற் சமயவுண்மைகள் நிற்கற்பாலன; எல்லார்க்கும் ஒத்தகொள்கைகள்; 156-159.

பதினெட்டாம் இயல்

மாணிக்கவாசகர் 'திருவாசகம்', 'திருச்சிற்றம்பலக்கோவையார்' அருளிச்செய்து, தில்லையம்பலத்தே சிவவொளியில் மறைந்தமை, 159-163.

புத்தரை வழக்கில்வென்றபின் அடிகள் அருந்தவத்தில் அமர்ந்தமை, 159. பெரியார் ஒருவர் அடிகள்பாற்போந்து 'திருவாசகம்', 'திருக்கோவையார்' எழுதிக்கொண்டுமறைய, மறைந்த அவர் சிவபிரானேயெனத்தெளிந்து அடிகள்குழைந்தமை, 160, 161. திருவாசகந்திருக்கோவையார் எழுதிய ஏடு பொன்னம்பலத்தின் படியிலே இருக்கக்கண்ட புதுமை, 161, 162. கோயிலிலுள்ள அடியார்கள் அடிகட்கு அதனை அறிவித்து, அவற்றின் பொருள் கேட்ப, அவரும் 'அம்பலக்கூத்தனே' பொருளெனவிளம்பி அருளொளியில் மறைந்தமை, 163.

இரண்டாம் பாகம்: மாணிக்கவாசகர் காலம், 1-முதல் 728 பக்கங்கள்.

முதல் இயல்

நந்திதேவர் ஒருவர் மாணிக்கவாசகராய்ப்பிறந்தமை, 1-8.

அடிகளின் காலங் கி. பி. ஒன்பதாம்நூற்றாண்டு என்றவர்கள் 1. மாணிக்கவாசகர் முற்பிறவியிற் சிவபிரான்பக்க லிருந்தவரென்பதற்குத் 'திருவாசகத்'திற் சான்று; நந்திகள் நால்வரென்பது, 2. நந்தியே மாணிக்கவாசகராய்வந்தனரென அப்பரும் அருளிச்செய்தமை; புராணக்கூற்றுகளின் முரண், 3, 4. 'வாசகன்' என்னுஞ்சொல் அடிகளையே யுணர்த்துதல்; அது 'தூதுவன்' என்னும்பொருளை யுணர்த்துமென்றார் கூற்றுப் பொருந்தாமை, 4-8.

இரண்டாம் இயல்

மாணிக்கவாசகர் குறிப்பிட்ட 'வரகுணன்' இன்னனென்பதும், பாண்டியஅரசு வடுகக்கருநாடராற் கைப்பற்றப்பட்டமையும், 8-14.

மாணிக்கவாசகர் தமது 'திருச்சிற்றம்பலக்கோவையா'ரிற் குறிப்பிட்ட 'வரகுணபாண்டியன்', தமிழ்நாட்டிற் கல்வெட்டுகள் உண்டாதற்குமுன் அதாவது கி. பி. 4-ஆம் நூற்றாண்டுக்குமுன் இருந்தவன்; கல்வெட்டுகளிற் குறிப்பிடப்பட்ட வரகுணபாண்டியர் இருவர்; கல்

வெட்டுகள் ஆராய்வோர் செய்தபிழை; 8, 9. 4-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட தமிழ்வேந்தர்பெயர் பழந்தமிழ்நூல்களிலன்றிக் கல்வெட்டு களிற் காணப்படாமை; கல்வெட்டுகள் தோன்றுதற்குமுன் இருந்த 'கரிகாற்சோழன்' பெயர் பூண்ட மூன்றரசர் கல்வெட்டுகளிற் காணப் படுதல்; பழங்காலத்திற் கல்வெட்டுகள் தமிழ்நாட்டில் இல்லாமைக்குக் காரணம்; 10, 11. வடுகக்கருநாடர் வேங்கடமலைக்கு வடக்கேயிருந்து வந்தவரென்பதற்குச்சான்றுகள்; சமணமதந் தமிழ்நாட்டிற்பரவியகா லம்; 12. திருஞானசம்பந்தரால் வெப்புநோய் தீர்ந்த 'நின்றசீர்நெடு மாறபாண்டியன்' நெல்வேலியில் வடபுலஅரசரொடு பொருது அவ ரைத்துரத்தினமை, 13. வடுகக்கருநாடர் பாண்டியனரசை வௌவிய காலம், 14.

மூன்றும் இயல்

'கல்லாடம்' என்னும்அரியஅகப்பொருள்நூலின்காலம், 14-24.

நச்சினார்க்கினியர் முதலான உரையாசிரியர் தமதுதொல்காப்பிய உரையுட் 'கல்லாடம்', 'திருக்கோவையார்' முதலியநூல்களிலிருந்து மேற்கோள் எடுத்துக்காட்டாத காரணம், 15. கல்லாடத்திற்குறிப்பிடப் பட்ட நாயன்மாருங் குறிப்பிடப்படாத நாயன்மாரும், 16, 17. சிவ பிரான் எழுதிவிட்ட 'திருமுகப்பாசுரக்'குறிப்புக் கல்லாடத்திற்காணப் படுதலின், அத்திருமுகம் சேரமான்பெருமாள் நாயனார்க்கு விடுக்கப் பட்டதெனும் 'பெரியபுராண' உரை பொருந்தாமை, 17-20. இறைவ னது திருக்கூத்துச் சிலம்பொலியைக் கேட்டவர் சேரமான்பெருமா ளேஎன்னும் 'பெரியபுராணஉரை'யும் பொருந்தாமை, 20, 21. இறை வன் திருவடிச்சிலம்பொலிகேட்ட சேரமன்னன் வேறென்பது, 21, 22. பழைய சேரமன்னரிற் பலர் சிவபிரான்மாட்டுப் பேரன்புடைய ரென்பதற்குக், கண்ணகி காலத்தவனான 'சேரன் செங்குட்டுவன்'. சிவபிரானிடத்துப் பேரன்புடையனாயிருந்தமை சான்றுதல், 23, 24.

நான்காம் இயல்

கல்லாடகாலத் தொடர்ச்சி; திருஞானசம்பந்தர்தம்முடைய திருப்பதிகங்களிற் குறிப்பிட்ட பாணரென்பார் 'பாணபத்திரரே' யல் லால் திருநீலகண்டயாழ்ப்பாணர் அல்லரென்பது, 24-42.

சம்பந்தர் கூறிய 'தாரம்' என்பது எழிசையுள் முதற்றோன்றும் இசைக்குப்பெயர்; அஃது ஆகுபெயராய் இறைவன் பாணபத்திரர் பொருட்டுப்பாடிய இசையை உணர்த்திற்று, 24-29. 'தாரம்' என்ப தற்கு வேறுபொருளுரைத்தார்கூற்றுப் பொருந்தாமை, 29-31. இறை

வன் பலகை இடுவித்தது பாணபத்திரர்க்கேயன்றித் திருநீலகண்ட யாழ்ப்பாணர்க்கு அன்றென்பது; இறைவன் திருநீலகண்டயாழ்ப்பாணர்க்குப் பலகையிட்டானென்னும் 'பெரியபுராண' உரை பொருந்தாமை; பாணபத்திரர்க்கு இறைவன் பலகையிட்டானென்னும் 'நம்பியார்திருவிளையாடற்புராண' உரையேபொருத்தமாதல்; 31-38. 'பாணபத்திரர்' கல்லாடகாலத்திற்கும் மாணிக்கவாசகர் காலத்திற்கும் முற்பட்டவர், 39. பாணபத்திரர், நக்கீரர், இடைக்காடர் முதலான சிவனடியார் பலர், சுந்திரமூர்த்திகள் அருளிச்செய்த 'திருத்தொண்டத்தொகை'யிற் கூறப்படாமையின் காரணம், 40. திருஞானசம்பந்தர் குறிப்பிட்ட பாணபத்திரரைத் தமது 'கல்லாட' நூலிற் குறிப்பிட்ட ஆசிரியர் கல்லாடனார், அங்ஙனமே சம்பந்தரை அதன்கட் குறிப்பிடாமை கொண்டு அவரதுகாலம் இன்னதென்பது, 41, 42.

ஐந்தாம் இயல்

கல்லாடகாலத் தொடர்ச்சி; பாவகையாராய்ச்சியால் 'திருவாசகம்,' 'கல்லாடம்' என்பன இயற்றப்பட்டகாலம் இன்னதென்பது, 42–62.

தமிழுக்குப் பழமையானது அகவற்பா; கட்டளைக்கலித்துறை, கலிவிருத்தம், ஆசிரியவிருத்தம் முதலியபுதுப்பாக்கள் கி. பி. 2-ஆம் நூற்றூண்டுக்குமுற்பட்டன அல்ல; இப்புதுப்பாக்கள் 'தொல்காப்பியத்'திற் சொல்லப்படாமை; 'சிலப்பதிகாரத்'தும் இவை காணப்படாமை; 42, 43. கி. பி. 3-ஆம் நூற்றூண்டிலிருந்து 6-ஆம் நூற்றூண்டு வரையிற் பழையபாக்களும் புதியபாக்களும் விரவிய தமிழ்நூல்கள் எழுந்தமை; 'திருவாசகம்', 'திருக்கோவையார்' இத்தகைய காலத்தில் எழுந்தவென்பது; ஆறும்நூற்றூண்டிற்குப் பின்வந்தநூல்கள் பெரும்பாலும் புதியபாக்களால் ஆக்கப்பட்டமை; திருவாசகத்துக்கும் முல்லைப்பாட்டுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள்; 44-47. 2-ஆம் நூற்றூண்டுக்கு முற்பட்ட தமிழ்நூல்களிற்கலந்த வடசொற்கணக்கும், அந்நூற்றூண்டுக்குப்பிற்பட்ட நூல்களில் வரவரக்கலந்த வடசொற்கணக்கும்; வடசொற் கலக்கலான காரணம்; இவ்வாற்றால் துணியப்படுங் 'கல்லாட', 'திருவாசக' காலம்; 47-50. திருவாசகத்தில் விரவிய பழைய புதிய தமிழ்ப்பாக் கணக்கு; 'கலித்தாழிசை' பழந்தமிழ்ப்பா அன்று என்ற 'தமிழ்வரலாறுடையார்'தம் அறியாமை; 'திருவாசகந்', 'திருக்கோவையார்' இரண்டும் பெரும்பாலும் பண்டைத் தமிழ்வழக்கேதழுவிவந்தனவென்பது; 50-53. 'திருக்கோவையார்' பழையதமிழ்

வழக்கைத்தழீஇ இயற்றப்பட்டமையினை நாட்டுதற்பொருட்டாகவே 'கல்லாடம்' என்னும்நூல் யாக்கப்பட்டமை; 'ஞானமிர்தம்', 'சங்கற்ப நிராகரணம்' என்பன அகவற்பாவால் யாக்கப்பட்டிருத்தல் கொண்டு, அவைமுழுதுந் தமிழ்வழக்கேதழீஇயின ஆகாமையுங், 'கல்லாட' நூலை அவை ஒவ்வாமையும்; இவையிரண்டின் காலம்; 53-57. தனித்தமிழ் காலம், புத்தகாலம், சமணகாலம், சைவவைணவ காலம், பார்ப்பன காலம், ஆங்கிலகாலம் என்னுங்காலவரையறைகளும், 'மணிமேகலை' 'பெருங்கதை,' 'சூளாமணி,' 'சிந்தாமணி,' 'திருமந்திரம்,' 'ஞானமிர் தம்,' 'தேவாரம்,' 'பெரியபுராணம்,' 'சிவஞானபோதம்,' 'சிவஞானசித் தியார்' முதலியநூல்கள் அவற்றிற்றோன்றியவாறும்; சைவசமயக் கொள்கைகள் எல்லார்க்கும் பொதுவாய்ப் பண்டைத்தமிழர்தங் கொள் கைகளேயாதல்; 'திருவாசகங்', 'கல்லாடம்' புத்தகால சமணகாலங் களில் முறையேதோன்றினமை; 57-62.

ஆறும் இயல்

கல்லாடகாலத் தொடர்ச்சி; திருவாசகந் திருக்கோவையார் தே வாரம் என்பவற்றிற் காணப்படும் பாவகைகள், 62-75.

கட்டளைக்கலித்துறை இலக்கணம்; இது தேவாரத்தில் 'விருத் தம்' என வழங்கப்பட்டமை; 62-64. திருவம்மானை, திருவுந்தியார், திருப்பொன்னூசல், திருச்சாழல் முதலான பாவகைகள் பண்டைக் காலத்தனவாதல்; திருவாசகத்திற்போல அதனினும் பழைய 'சிலப் பதிகாரத்'தில் அம்மானைவரி, ஊசல்வரி உளவாதல்; அங்ஙனமே 'திருக்கோத்தும்பி', 'திருத்தோணோக்கம்', 'திருச்சாழல்', 'திருவுந்தி', 'திருப்பொற்சுண்ணம்', 'திருப்பூவல்லி', 'திருப்பள்ளியெழுச்சி' முத லியனவும் பண்டை இசைத்தமிழ்நாடகத்தமிழ் நூல்களில் உளவென்று உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் காட்டினமை; 64-66. 'கோவை' என்னும் நூல்வகை பிற்காலத்ததென்றூரது உரை பிழையாதல்; 'இந் திரகாளியம்' என்னும் நூலில் உலா, அந்தாதி, மும்மணிக்கோவை என்னும் நூல்வகைகள் குறிக்கப்பட்டமை; 8-ஆம்நூற்றாண்டிலிருந்த சேரமான்பெருமாள் நாயனாராலும், 4 ஆம்நூற்றாண்டிலிருந்த காரைக் காலம்மையாராலும் இந்நூல்வகைகள் இயற்றப்பட்டமை; இவை போன்ற நூல்வகைகள் ஆசிரியர் தொல்காப்பியனார் வகுத்துரைத்த எண்வகை வனப்பினுட்படுதல்; திருக்கோவையாரின் செய்யுட்பொ ருள்கள் 'அகநானூறு', 'நற்றிணை' முதலானபழைய அகப்பொருணூல் களோடு ஒத்தல்; 67-69. 'கட்டளைக்கலித்துறை' 3-ஆம்நூற்றாண்டிற்

புதிது புகுந்த தமிழ்யாப்பேயாதல்; தேவாரத்திற் பழைய தமிழ்ப்பா வகைகள் காணப்படாமற் புதுத்தமிழ்ப்பாவாகிய 'விருத்தமே' காணப் படுதல்; இவைதோன்றிவளர்ந்தகாலம்; 'கல்லாடம்', 'பெருங்கதை', 'ஞானாமிர்தம்' என்பன பழையஅகவற்பாவால் ஆக்கப்படினும் அவை கி. பி. ஐந்து ஆறும் நூற்றாண்டுகட்கு முற்பட்டனவாதல் செல்லாமை; 69-72. 'கல்லாடம்' கி. பி. 13-ஆம்நூற்றாண்டிற்குப்பின்னதென்றார்கூற்றுப் பிழையாதல்; கல்லாடர் இயற்றிய 'திருக்கண்ணப் பதேவர் திருமறம்' 11-ஆம்நூற்றாண்டிற்கு முற்படுதல்; பரிமேலழகியார் நச்சினார்க்கினியர்க்கு முன்னிருந்தோராதலும், அவர் தாம் நச்சினார்க்கினியர்க்கு முன்னெழுதிய 'திருமுருகாற்றுப்படையுரை' யிற் கல்லாடச்செய்யுட்களை மேற்கோளாக் காட்டினமையும்; இவ்வாற்றால் 'திருவாசகம்', 'கல்லாடம்' என்பவற்றின் காலங் கி. பி. 10-ஆம் நூற்றாண்டிற்கு முற்சென்று முன்னையது 3-ஆம் நூற்றாண்டிலும் பின்னையது 6-ஆம் நூற்றாண்டிலும் படுதலும்; 72-75.

எழாம் இயல்

திருவாதவூரடிகள் குறிப்பிட்ட 'வரகுணபாண்டியன்' இத்தமிழ் நாட்டிற் கல்வெட்டுகள் உண்டாதற்குமுன் இருந்தோனென்பது, 75-85.

போர்க்களத்திற் புறமுதுகுகாட்டாது இறந்துபட்ட மறவர்க்கு மட்டுங் கல்நாட்டும் வழக்கம் பண்டிருந்ததேயல்லால், அரசர்க்குக் கல் வெட்டமைக்கும் வழக்கம் பண்டிருந்திலது; பண்டைத்தமிழர் எழுத் தெழுத அறியார் என்றவருரை அறியாவுரையாதல்; பண்டைச்சேர சோழபாண்டியரை அசோகவேந்தனுந் தன்கீழ்அடக்கமாட்டாமல் அவரை நண்பராய்க்கொண்டமை; 'பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன்' என்னுந்தமிழ்வேந்தன் இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகட்குமுன் வடக்கே சென்று பாண்டவர் கௌரவர்படைக்கு உணவளித்தமை; 75-79. வடநாட்டிற் கல்வெட்டுகள் உண்டானமைக்கு எது; பல்லவஅரசர் தமிழ்நாட்டிற் புகுந்தபின்னரே இதன்கட் கல்வெட்டுகள் உண்டானமை; பல்லவராட்சிக்கு முன்னிருந்த தமிழ்வேந்தர்தம் வரலாறுகள் பழைய தனித்தமிழ்நூல்களாலன்றி அறியப்படாமை; 80, 81. 'வடுகக்கருநாடர்' இன்னவரென்பது; பல்லவரும் ஆந்திரரும் உறவினராதல்; தக்கணதேயத்தின் எல்லை; 'குமரிநாடு' கடல்கொண்ட காலத்து அங்கிருந்த தமிழரே வடமேற்கு வடக்கு வடகிழக்கிற்சென்று 'பிராகுவியர்,' 'ஆந்திரர்', 'கோடர்', 'தோடர்', 'கோண்டர்', 'நாகர்', 'துளு

வர்,' 'கருநடர்,' 'மலையாளர்,' 'வேளாளர்' எனப் பல்வேறு பெயர் பெற்றமை; பல்லவர் சாளுக்கியர் ஆந்திரர் என்பாரும் வேளாளரும் ஓரினத்தவராதல்; 81-83. நாகபட்டினத்துச்சோழன் நாகநாட்டிற் சென்று அதன்கண் அரசுபுரிந்த நாகமன்னன் புதல்வி 'பீலிவளை' யை மணந்து அவள் வயிற்றிற் பிறந்த மகனுக்குத் தன்நாட்டிற் பாதி யரசுகொடுத்தமை; ஆதொண்டைச்சோழன் அரசாண்டநாடு 'தொண்டைநாடு' எனப் பெயர்பெற்றமை; இச்சோழன்வழிவந்த 'தொண்டையரே' பின்னர்ப் 'பல்லவர்' எனப்பட்டனர்; 83-85.

எட்டாம் இயல்

பல்லவர் வாலாறும், மாணிக்கவாசகர் குறிப்பிட்ட வரகுணபாண்டியன் காலமும், 85.-114

காஞ்சிநகரில் அரசுபுரிந்த 'சிவஸ்கந்தவர்மன்' என்னும் 'ஆதொண்டைச்சோழன்' என்பான், ஆந்திரபிருத்தியஅரசரிற்சிறந்த 'புளுமாயி' என்பவன் மகனுன 'சிவஸ்கந்தவர்ம'னின் பேரனென்பது; பீலிவளை யின் மகனுன இவ் ஆதொண்டைச்சோழனைப்பற்றிக் கூறும் 'மணிமேகலை' வரலாற்றின் உண்மை; 85-87. சோழன் கிள்ளிவளவனுக்கு முன்னிருந்த சோழவேந்தர்கள், தமதுநாட்டில் வடுகமன்னர் புகாத படி அவரைத்தடுத்து ஓட்டினமை; 88. வடுகர் தமிழ்நாட்டிற் புகுதற்கு இடம்பெற்ற காலந்தொடடுத் தமிழ்மன்னர் வலிசுருங்கினமை; கண்ணகியின் சீற்றத்தாற் சோழபாண்டியநாடு சீர்குலைந்தமை; கடைச்சங்கம் இல்லையாய்ப் போனகாலம் கி. பி. உ௨0-ஆம் ஆண்டென்பது; 89, 90. கடைச்சங்கமும் உக்கிரப்பெருவழுதியும் இல்லையாய்ப்போன பின் அரசுக்கு வந்தோன் 'வரகுணபாண்டியன்' ஆதலும், அவன் சிவபிரான் திருவடிக்கட் பேரன்புடையோன் ஆதலும், அவன் அரசவாழ்க்கை துறந்து இறைவன் திருக்கோயில்கடோறுஞ் சென்றமையும், 90-92. இவ்வரகுணனுக்குப் பின்வந்த பாண்டியனிடத்தேதான் மாணிக்கவாசகர் அமைச்சராயிருந்தனரென்பதும், வரகுணபாண்டியன் அரசுதுறந்து தில்லைச்சிற்றம்பலத்தே போந்து இறைவனை வணங்கியிருந்தனுன்று, மாணிக்கவாசகருந்தமது அமைச்சியற்கடமைதுறந்து தில்லைச்சிற்றம்பலம் போந்து அவ்வரசனைக்கண்டு அவன்றன் மெய்யன்பினை வியந்து அவனைத் தமது 'திருக்கோவை'யாரிற் குறிப்பிட்டனரென்பதும், 93, 94. கல்வெட்டுகளிற் குறிப்பிடப்பட்ட வரகுண பாண்டியர் இருவருங் கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவ

ராதலும், இவ்விருவருக்கும் முற்பட்டவனே திருவாதவூரர் குறித்த வரகுணனாதலும், 114.

ஒன்பதாம் இயல்

திருநாவுக்கரசுநாயனார் தமது தேவாரத்திற்குறிப்பிட்ட சில திருவிளையாடல்கள் மாணிக்கவாசகர்பொருட்டே நிகழ்ந்தனவென்பது, 114-127.

"நரியை குதிரைசெய்வானும்" என்ற அப்பர் திருமொழிக்குச் சிலர் கொண்டபொருளும், அப்பொருள் பொருந்தாமையும்; இறைவன் அன்பர்க்குஎளியனாய்வந்து அருள்செய்தலின் சிறப்பு; 114-117. இத்திருவிளையாடல் இன்னார்பொருட்டு நிகழ்ந்ததென்று நாயனார் கூறாமைபற்றி அது பொதுவாகாமை; இங்ஙனம் ஆன்றோர் கூறுதற்குச்சான்று; 117, 118. "கழுமலமதனிற் காட்சிகொடுத்தது" பொதுவாதல், 119. "நரியைக்குதிரைசெய்வானும்" என்று அதனை எதிர்காலச்சொல்லாற் கூறுதல்கொண்டு, அந்நிகழ்ச்சி இனி நிகழ்வதாதல் செல்லாமை; இறந்தகாலத்தில் நிகழ்ந்தவற்றை எதிர்காலச்சொல்லாற் கூறும்வழக்குப் பண்டையதென்பதற்கு, ஆசிரியர் தொல்காப்பியனார் காட்டியஇலக்கணமும், ஆன்றோர்ஆட்சியும்; 120, 121. வரகுணபாண்டியமன்னன் மாணிக்கவாசகர் காலத்தவனென்பதற்குத், திருக்கோவையாரில் அவனைக்குறித்தகுறிப்பில் நிகழ்காலச்சொற் காணப்படுதலே சான்றென்றுகொண்டவர், "நரியைக்குதிரைப்பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்துப், பெரியதென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும் பெருந்துறையான்" என்று அடிகள் குறித்தகுறிப்பிலும் 'எற்றும்' என நிகழ்காலச்சொற் காணப்படுதலை அறியாது பிழைபட்டமை; 122. நரிபரியாக்கிய நிகழ்ச்சியும், பிட்டுக்குமண்சுமந்த நிகழ்ச்சியும் கி. பி. 6-ஆம் நூற்றாண்டின் துவக்கத்ததான 'கல்லாட'நூலிற் காணப்படுதல், 123. "மணியார் வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமுந்தோன்றும்" என்ற அப்பர்திருமொழிக்கு, இறைவன் மண்சுமந்த திருவிளையாடற்குறிப்பை விட்டு வேறுபொருள் கொண்டார்உரை வழுவாதல், 124, 125. 'திருப்பெருந்துறை' என்பதுதமிழ் நாட்டிற்கு மேல்பாலதான மலையாளக்கரையி லுள்ளதெனக்கொண்டாரதுகோள் தவறுதல்; திருப்பெருந்துறை தென்னாட்டின்கண்ணதான 'மிழலைக்கூற்றத்'தின்கண் ணுள்ளதென்பதற்குச் சான்றுகள்; 125-127.

பத்தாம் இயல்

இலங்கைத் தமிழ்மன்னர்களும், மகாயான ஈனயான பௌத்த மதவகைகளும், மாயாவாதம் பௌத்தமதமேயாதலும், 127-142.

கிறித்துபிறப்பதற்குமுன் முதலிருநூற்றாண்டுகளிலும், அவர்க்குப்பின் ஒன்பதாம் நூற்றாண்டுவரையிலும் இலங்கையைஆண்ட தமிழ் மன்னர்கள், 128. கௌதமர்கூறாத 'சௌத்திராந்திகபௌத்தமே' ஈனயானம் என்னும் பெயருடைத்தாய் இலங்கைத்தீவிற் குடிபுகுந்தமையும், சைவசமயத் தொடர்புடைய 'மகாயானபௌத்தமே' இவ்விந்திய நாட்டில் நிலவினமையும், கி. பி. முதல்நூற்றாண்டில் வடநாடாண்ட அரசர்கள் சிவபிரானிடத்து அன்பராய்த்திகழ்ந்தமையும், மாணிக்கவாசகரோடு இலங்கைப்பௌத்தர்களே வழக்கிடவந்தமையும், 129-132. 'வேதுல்யமதம்' என்பது சைவசமயத்தொடர்புடையதாய்க் கி. பி. 3,4-ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையிற் பரவினமை; இலங்கைப்பௌத்தர்க்கும் மாணிக்கவாசகர்க்கும் இடையேநடந்த சமயவழக்குக் கி. பி. 250-க்கும் கி. பி. 260-க்கும் நடுவில் நிகழ்ந்ததாகல்வேண்டுமென்பது; 132-134. பௌத்தமதந் தமிழ்நாட்டில் தலையெடுத்ததும் பின் ஒடுங்கியது மெல்லாங் கி. பி. 2-ஆம் நூற்றாண்டின் துவக்கம் முதல் 4-ஆம் நூற்றாண்டின் நடுவரையிலாதல்; கல்வெட்டுகளிற் குறிப்பிடப்பட்ட பின்வரகுணபாண்டியர் இருவர்காலத்திற் பௌத்தசமயம் இல்லாமை; கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் அடிகள் இருந்தவராயின் அவர் சேரசோழபாண்டியர்களைக் குறிப்பிட்டதுபோல், அக்காலத்திற் சிறந்துவிளங்கிய பல்லவஅரசரையுங் குறிப்பிட்டிருத்தல்வேண்டும்; ஆனால் அக்குறிப்பு அவர்நூல்களில் இல்லாமை; 134-136. 'மணிமேகலைக்'காப்பியம் இயற்றப்பட்டகாலத்தில் அறுவகைச் சமயக்கோட்பாடுகள் இருந்தனவேனும், அவற்றுட் புத்தசமயக்கோட்பாடே அஞ்ஞான்று தலைசிறந்து நின்றமை; மாணிக்கவாசகர் புத்தசமயத்தையன்றிச் சமண்சமயத்தைத் தந்நூலுட் குறிப்பிடாமையும், அப்பர் சம்பந்தர் சுந்தரர் என்னும் ஏனைமூவரும் புத்தத்தொடு சமணத்தையுந் தம் திருப்பதிகங்களிற் குறிப்பிட்டமையும், புத்தமதத்தையே அடிகள் மாயாவாதம் என்றமையும்; 137, 138. மாயாவாதம் சங்கராசாரியார்க்கு முன்னிருந்ததென்பது 'திருமந்திரத்'துள் அது கூறப்படுவதுகொண்டு அறியப்படுதல்; திருமந்திரநூல் 7-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாதல்; 139, 140. 'சிவம் ஆதல்' என்னுஞ் சொற்றொடர்ப்பொருள்நிலை

சைவசமயாசிரியர் நால்வர்க்கும் உரித்து; அச்சொற்றொடர் மாயாவாதப்பொருள் பயவாமை; 141, 142.

பதினோராம் இயல்

'சிவம்ஆதல்' என்பதற்கு உண்மையில் உரிய சைவசித்தாந்த மெய்ப்பொருள், 142-172.

மலம் மாயை வினையென்னும் மூன்றும் இயற்கையில் இல்லாததே 'சிவம்' என்பதும், அம்மூன்றும் இயற்கையில்உள்ளனவே 'உயிர்' என்பதும், மலம் மாயை வினையென்பன இவையென்பதும், படைப்பின் நோக்கமும், பேரின்பவீடுபேற்றினை எய்தும் உயிர்கள் அவ்வீடுபேற்றின்கண்ணும் உளவாதலும்; 142-145 பதி பசு பாசம் மூன்றும் என்றும் உள்ள மெய்ப்பொருள்களாதல்; மாயாவாதம் பிரமத்தைத் தவிர ஏனையவற்றை இல்பொருளென்பது; சைவசித்தாந்தம் மூன்றையும் உள்பொருளென்பது; சிவத்துக்கும் உயிர்கட்கும் உள்ளவேறுபாடு; 146, 147. மூலமலத்தின் பலவேறுதன்மைகளையும் அடிகள் பலவேறு பெயர்களால்வழங்கினமை; அங்ஙனமே சிவத்தினியல்புகளையும் அவர் பலவேறு அடைமொழிகளால் விளங்கவைத்தமை; வீடுபெற்ற உயிர்கள்பாற் சிவம் முனைத்துத்தோன்றும் முறை; 148, 149. வீடுபெற்ற உயிர்களிற் சிவம் முனைந்துநிற்கும் உண்மையை அடிகள் கூறுமாறு போலவே, திருமூலர், அப்பர், சம்பந்தர், மெய்கண்டதேவர், திருவள்ளுவர் முதலாயினாருங் கூறுதல், 150. இறைவன் திருவடிப்பேறுந் திருவருட்பேறும் ஒன்றேயாதல்; அத்துவிதமுத்தியின் உண்மை; வடமொழிமறைநூல்களிலும் அத்துவிதச்சொல்வழக்கு இப்பொருட்டாதல்; அத்துவிதச்சொல்லின் மெய்ப்பொருள்கண்டவர் மெய்கண்டதேவர் ஒருவரேயாதல்; 151-153. "தான் ஒருவனுமே பலவாகிநின்றவா" என்று அடிகள் அருளிச்செய்த சொற்றொடர்ப்பொருள் மாயாவாதப்பொருளாகாமை, 154, 155. "சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்தொன்றாம்" என்றருளிய அடிகளின் திருமொழிப்பொருள் விளக்கம், 156-172.

பன்னிரண்டாம் இயல்

சைவசித்தாந்தக்கொள்கைகளும், அவற்றைக்கூறுந் தமிழ்ஆகம வடமொழியாகம ஆராய்ச்சிகளும், அவற்றின் காலஅளவைகளும், 172-202.

திருஞானசம்பந்தர் திருவாவடுதுறைக்குச் சென்றஞான்று திருமூலரது திருமந்திர ஆகமநூலை ஆண்டுள்ள கோயிலிற் கண்டெடுப்

பித்து வழங்கவைத்தமை; 6-ஆம் நூற்றூண்டின் இடையில் இயற்றப் பட்ட திருமந்திரத்திற் சைவசித்தாந்தக்கொள்கைகள் விளக்கப்பட் டமை; 6-ஆம் நூற்றூண்டிற்கு முன்னமே இக்கொள்கைகள் உளவா தல்; அடிகளும் இக்கோட்பாடுகள் உடையர்; 172-175. தேவாரகாலத் திற்கு முன்னரேயே ஆகமங்கள் உண்மை; முதலிலிருந்த ஒன்பது ஆகமங்களிலிருந்தே இருபத்தெட்டாகமங்கள்பிறந்தமை; சைவாகமங் கள் தோன்றியகாரணம்; பௌத்தசமயகாலத்திற்கு முன்னெழுந்த நூல்கள் சமயஆராய்ச்சி செய்யாமை; தமிழறிவுநூல்கள் மக்கட்குப் பயன்படுமாறு வகுக்கப்பட்டமை; 175-179. 'பௌட்கராகமம்' பௌத்தமத மாயாவாதமதக் கொள்கைகளை மறுத்தல்; சமணர்கள் தமிழ்ஆகமங்களை அழித்தமை; 'ஞானமிர்தம்' ஒருதமிழ்ஆகமம்; இஞ் ஞான்று வடமொழியில் எழுதப்பட்டுவழங்குங் 'காமிகம்' முதலியன மிகப்பிற்பட்டகாலத்தனவாதல்; 180-182. 'சிவஞானபோதம்' என் னுந் தமிழாகம முதல்நூல் வடமொழியிலிருந்து வந்ததாகாமை, 182-186. சிவஞானபோதச் சூர்ணிகைக்கொத்துப் பொல்லாப்பிள்ளை யார் செய்ததென்பது பொய்க்கதையாதல்; 'காமிகம்', 'காரணம்' முத லிய வடமொழியாகமங்கள் தேவாரகாலத்திற்குப்பின் கோயிற்குருக் களால் ஆக்கப்பட்டமை; திருமூலர் குறிப்பிட்ட தமிழ்ஆகமங்கள் கி. பி. 6-ஆம் நூற்றூண்டிற்கு முற்பட்டவை; 186, 187. இறைவனை யுணரும் மெய்யுணர்வு ஆகமநூலறிவினுலேயே வரும் என்று சான் றோர் கூறுதலால், மெய்ப்பொருளாராய்ச்சி செய்யாது கோயிலமைக் கும் முறைகளையும் வழிபாடாற்றும் வகைகளையும்மட்டும் விரிக்கும் இக்காலத்துக் 'காமிகம்', 'காரணம்' முதலிய ஆகமங்கள் பழையதமிழ்க் கற்றச்சு நூல்களின் மொழிபெயர்ப்பாகுமென்பது; 'பௌட்காம்' முத லிய உபாகமங்களே பழைய தமிழாகம மொழிபெயர்ப்பாய் மெய்ப் பொருள்தேற்றுமென்பது; 188. 'திவாகர' நிகண்டு வடமொழியாக மங்களை எடுத்தோதாமை; வடமொழியாகமப்பெயர் ஒன்பது கூறுந் 'திருமந்திரச்' செய்யுள் திருமூலர் செய்ததாகாமை; திருமூலர் செய் யாதபலசெய்யுட்கள் 'திருமந்திரத்'திற்கலந்துள்ளமை; யானைமுகக்கட வுள் வழிபாடு கி. பி. 6-ஆம் நூற்றூண்டின் பிற்பகுதியிற் றோன்றின மை; மாணிக்கவாசகர் யானைமுகமுடையபிள்ளையாரை எங்குங் குறிப் பிடாமை; பிறரால் எழுதித் திருமந்திரத்திற் சேர்க்கப்பட்டசெய்யுட் கள்; பெரியபுராணத்திலும், இறையனாகப்பொருளுரையிலும் பிற ராற் சேர்க்கப்பட்டவை உளவென்பது; 189-192. 'திருமந்திரம்'

சிறந்த தமிழாகமம் ஆதல்; இதனை வடநூல் மொழிபெயர்ப்பு என்ற பார்ப்பனருரை பழுதாதல்; "தத்துவஞானம் உரைத்தது தாழ்வரை" என்னுந் திருமூலர் திருமொழியின் உண்மைப்பொருள்; திருமூலர் வேதங்களென்றவை இருக்கு எசுர் சாமம் ஆகாமை; உபநிடதங்களை யொத்த பழைய மெய்ப்பொருள் நூல்களே அவையாதல்; ஆகமம் என்றனவும் இஞ்ஞான்றுள்ள 'காமிகம்' முதலியன ஆகாமை; உபநிடதங்களும் உண்மையில் வேதங்கள் ஆகாமை; 192-199. வேதாங்கங்கள் அறிவுடையோர் இயற்றியனவென்பது; அறிவுடையோர் இயற்றிய நூல்களைக் கடவுளே இயற்றினாரெனக் கரையும் ஆரியப்பார்ப்பன ருரையின் குற்றம்; தமிழ்ச்சான்றோர், சமயாசிரியர் திருமொழிகளை யும் அங்ஙனம் உரையாத மாண்பின் வாய்மை; ஆரியப்பார்ப்பனர் தம் ஆரியநூல்களைக் கடவுள்வாய்மொழியென்று கூறுதலின் சூழ்ச்சியும் புரட்டும்; 199-202.

பதின்மூன்றும் இயல்

தமிழரைப் 'பொய்யர்,' 'ஒழுக்கம் இல்லாதவர்' என்று வைத பார்ப்பனர் உரையின் ஆராய்ச்சியும், ஆரியப்பொய்யும் ஒழுக்கமில்லாமையும், 202-219.

சீநிவாச ஐயங்கார் தமிழரைவைதமை; பழையதமிழ்நூல்களையும் ஆரியநூல்களையும் ஒப்பிட்டுநோக்குதலாற் பழையதமிழ்மக்கள் உயர்ந்தோராதலும் ஆரியர் இழிந்தோராதலும்விளங்குமென்பது, 202-204. தமிழ்நாட்டில் ஆரியர் குடியேறியபின் அவர்க்குரிய தீயசெயல்கள் இங்குப்பரவினமையின், அத்தீயவற்றைத் தடைசெய்யவே 'திருக்குறள்,' 'நாலடியார்' முதலானஒழுக்கநூல்கள் தோன்றினவென்பது, 205. ஆரியமீமாஞ்சகரும் பின்னர்ப் பௌத்தருங் கடவுளையின்றியே வீடுபேறெய்தலா மென்றதையும், உயிர்க்கொலை குற்றமன்று என்றதையுந் 'திருவள்ளுவர்,' 'திருமூலர்' என்னும் ஆசிரியர்மறுத்தல்; ஆரிய நூல்களான இருக்கு எசுர் முதலியனவெல்லாம் உயிர்க்கொலை நிரம்பி யிருத்தல்; 206, 207. ஆரியப்பார்ப்பனர் தம்மைத் தேவரினும் உயர்ந்தோராக உயர்த்துக்கூறித் தாம் எத்தகைய தீயசெயலுஞ் செய்யலா மென்று ஆரியநூல்களில் எழுதிவைத்தமையும், அங்ஙனம் எழுதிய அவர்தந் தீதுகளைத் தமிழ்ச்சான்றோர் மறுத்தமையும், 207-210. கட்குடியனான ஆரியன் ஒருவன் தான் குடித்த கள்வெறியாற்பாடியபாட்டுஞ், சூதாடுவோனான ஆரியன் மற்றொருவன் தானாடுஞ் சூதுகாய்களை உயர்த்துப்பாடியபாட்டும் இருக்குவேதத்தில் உண்மை; இத்தகைய

இழிந்தபாட்டுகளையுடைய இருக்குமுதலிய ஆரியநூல்களுக்கும், இஞ்ஞான்றை இழிசினர்க்குள் வழங்குங் 'கள்ளுக்கடைச்சிந்து' முதலிய பொல்லாப்பாட்டுகட்கும் எதொருவேறுபாடும் இல்லையாகவும், இவை தம்மை ஆராய்ந்துபாராது இந்நூல்களையெல்லாஞ் சிவபிரானுரை என்பாருரையின் இழுக்கு; ஆரியத்தலைவரின் காமவெறி; தமிழ்த்தெய்வமான சிவபிரான் காமனை எரித்தமை; 210-213, தமிழ்மக்கட்குரிய சிறந்தகாதலொழுக்கம், 214. ஆரியமாதர்தங் கற்பில்லாக் காமநெறி; நல்லொழுக்கமும் இரக்கமும் இறைவனிடத்து அன்பும், உயர்ந்தநோக்கமும் ஆரியர் உடையரல்லாமை; 215–217. பண்டைத்தமிழர்தங் காதலன்பினைந்திணைவாழ்க்கை; ஆரியர் வந்தபின் தமிழர் மாட்டுப் பொய்யும்வழுவுந் தோன்றினமையும், அவற்றைக்கடியவே ஒழுக்கநூல்கள் தமிழின்கண் மிகுந்து தோன்றலானமையும்; 218, 219.

பதினான்காம் இயல்

'திருமந்திரம்,' 'பெரியபுராணம்' என்பன வடநூல்மொழிபெயர்ப்பு ஆகாமையும், அகத்தியரே முதன்முதல் தமிழ்க்கு இலக்கணஞ் செய்தாரென்பது கட்டுக்கதையாதலும், பண்டைச்சிவாகமங்களெல்லாந் தமிழேயாதலும், 220-245.

தமிழ்மண்டலம் ஐந்தில்மட்டும் அஞ்ஞான்று ஞானம்பரவியிருந்தமை; வடநூல்கள் சிலவற்றிலன்றி ஏனைப்பலவற்றில் முழுமுதற் கடவுளான சிவபிரான்வழிபாடு காணப்படாமை; சிவபிரான்றிருக்கோயில்கள் தமிழ்நாட்டிற் பல்லாயிரக்கணக்காய் இருத்தல்போல் வடநாட்டில் இல்லாமை; 220,221. 'மந்திரம்' என்னுஞ்சொல் தூயதமிழ்ச் சொல், 222, 223. 'மாலை' என்னுஞ்சொல்லுந்தமிழ், 223, 224. திருவாதவூரடிகளுந் திருமூலநாயனாருங் குறிப்பிட்ட வேதம் ஆகமம் என்பன இஞ்ஞான்று அப்பெயரால் வழங்கும் ஆரியநூல்களாகாமைக்கு ஆரிய நூல்களிலிருந்தே பின்னும் பலசான்றுகள், 224, 225. 'தீக்ஷை' ஆகமங்களில்மட்டுமே சொல்லப்பட்டதென்றுரையின்பொய்ம்மை; அதர்வவேதத்திலும், பாரதத்திலும் அதுசொல்லப்பட்டமை, 225. உபமந்யுமுனிவரைத்திருநாவுக்கரசர் தமதுபதிகத்திற்குறிப்பிட்டமை; அதனால் 'உபமந்யுபக்தவிலாசம்' அம்முனிவர்செய்ததாகாமை; அங்ஙனமே 'அகத்தியபக்தவிலாசமும்' அகத்தியர்செய்ததாகாமை; 226, 227. அகத்தியரைப்பற்றியகதைகள் கி. பி. 5-ஆம் நூற்றாண்டுமுதல் ஆரியப்பார்ப்பனராற் கட்டி விடப்பட்டமை; 'புறப்பொருள்வெண்பாமாலை'யின்காலம்; 227, 228. 'பன்னிருபடலம்' அகத்தியர்மாணாக்கர்

பன்னிருவராற் செய்யப்பட்டதென்னுங் கதைப்பொய்மை; 229. தொல்காப்பியனார் அகத்தியர்க்கு மாணாக்கரென்னுங் கதைப்புரட்டு; 'புறநானூறு,' 'அகநானூறு,' 'கலித்தொகை' முதலான நூல்களின் செய்யுட்கள் இயற்றப்பட்டகாலத்தில் அகத்தியரென்பார் தமிழ்நாட்டில் இல்லாமை; 'சிற்றகத்தியம்,' 'பேரகத்தியம்' என்பன அகத்தியர் செய்தன அல்லாமை; 230, 231. அகத்தியர் எனப்பெயர்கொண்டார் பலர்இருந்தமை; நக்கீரர்காலத்து அகத்தியர்; மக்கள்யாக்கை மிக நீண்டகாலம் உயிரோடிராமை; 232, 233. அகத்தியரை இராமன் கண்டானென்னுங்கதை பொய்யென்பது; மழைக்கடவுளாகிய இந்திரன் 'ராமன்' எனவும், உழவுசால் 'சீதை' யெனவும் இருக்குவேதத்திற் சொல்லப்பட்ட இயற்கைநிகழ்ச்சியே பின்னர் இராமாயணகதையாகக் கட்டிவிடப்பட்டது, 233, 234. புத்தசமயநூலாகிய 'ஜாதககாதை' யிற் சொல்லப்பட்ட இராமன்கதையில் இராமன் தெற்கேபோந்து இராவணனைக்கொன்றான் என்பது சொல்லப்படவில்லை; 'வால்மீகி ராமாயணம்' புத்தசமயநூலாகிய 'ஜாதககாதை'க்குப் பின்னர்ச்செய்யப்பட்டமைக்குச் சான்றுகள்; 235, 236. கிறித்துவுக்கு ஒருநூற்றாண்டுமுற்பட்ட பழந்தமிழ்ப்பாட்டுகளில் 'இராம இராவணரை'ப்பற்றியகுறிப்புக் காணப்படாமை; இவரைக்குறிப்பிட்ட 'ஊன்பொதி பசுங்குடையார்' ஒருவர்மட்டும் இராமாயணகதை தமிழ்நாட்டிற் பரவத்துவங்கிய கி. மு. முதல்நூற்றாண்டிலிருந்தவர்; பெரும்பாலும் உள்ளதுகூறும் பாரதக்கதை தமிழ்மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தாற்போல் இல்லதுகூறும் இராமன்கதை அவரைத் தன்வயப்படுத்தியதில்லை; கண்ணபிரானைப்போல் இராமன் உண்மையில் இருந்தோன் அல்லன்; தமிழ்நாட்டிற் கண்ணபிரான் வணங்கப்பட்டாற்போல் இராமன் வணங்கப்படாமை; கி. பி. 7-ஆம் நூற்றாண்டிற்குப்பின்னரே இராமவணக்கம் உண்டானமை; 237–240. வான்மீகிராமாயணத்தில் அகத்தியர்பலர் இருந்தமை நுவலப்படுகின்றது; 'அகத்தியஜாதகத்'திற் சொல்லப்பட்ட அகத்தியர் பௌத்தமுனிவர்; கி. பி. முதல் நூற்றாண்டில் ஆசிரியர் நக்கீரனாரோடு ஒருங்கிருந்த அகத்தியர் கி. பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்த சுந்தரமூர்த்திகள் வரலாற்றையும், அவர்க்கு முன்னிருந்த நாயன்மார் வரலாறுகளையும் விரித்து 'அகத்தியபக்த விலாசம்' இயற்றினாரென்பது ஆரியப்பார்ப்பனப் புராணப்புரட்டாதல்: 240–242 காசுமீரத்திற் றோன்றிய 'பிரத்தியபிஞ்ஞாதரிசனமே' சைவசித்தாந்தத்திற்குப் பிறப்பிடமென்ற பார்ப்பனருரையின்

பொய்ம்மை; பிரத்தியபிஞ்ஞைக்கு முதல்நூலாகிய 'சிவசூத்திரங்கள்' தமிழ்ச்சிவாகமங்களிற்றோன்றி வடக்கேசென்றமை; 'சைவசித்தாந்தம்' பிரத்தியபிஞ்ஞைக்கு முற்பட்டகாலத்ததாதல்; 'பௌட்கரம்,' 'மிருகேந்திரம்' என்னும் உபாகமங்களேபழந்தமிழாகமமொழிபெயர்ப்பு; 'காமிகம்' முதலியன பழந்தமிழ்த்தச்சுநூல் மொழிபெயர்ப்பு; கி. பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்த 'வராகமிகிரர்' தமிழில் 'நக்நஜித்' என்பவர் இயற்றிய தச்சுநூலைக்குறிப்பிட்டமை; கோயிற்றச்சுநூல்கள் தமிழ்நாட்டிற்கே உரியவை; 242-245.

பதினைந்தாம் இயல்

மாணிக்கவாசகர், நம்மாழ்வார் என்னும் இருவரில் முன்னிருந்தவருந் தெய்வத்தன்மையுடையவரும் இன்னாரென்னும் ஆராய்ச்சி, 245-269.

நம்மாழ்வாரைப்பற்றி வைணவர் கூறுங்கதை, 246. பெரியார் ஒருவரின் உண்மைவரலாற்றைத் துணிதற்குக் கருவியாகும் 'அகச்சான்று,' 'புறச்சான்று'கள்: நம்மாழ்வார் மக்கட்டன்மையுடையரென்பது அவர்தம் வாம்மொழியினாலேயே பெறப்படுதல்; வைணவர்கூறும் நம்மாழ்வார் வரலாறு, சைவசமயாசிரியராகிய திருஞானசம்பந்தரது உண்மைவரலாற்றுக்கு மாறாகக்கட்டிய பொய்க்கதை; 247, 248. திருஞானசம்பந்தர் மூன்றாண்டுள்ள சிறுபிள்ளையாயிருந்தபோதே கடவுளால் ஞானப்பால் ஊட்டப்பெற்றமைக்கு அகச்சான்று, 249, 250. மாணிக்கவாசகர் கடவுளைநேரேகண்டமையாற் கடவுட்டன்மையுடையரென்பதற்கு அகச்சான்று, 251. நம்மாழ்வார் பலநூல்களையும் ஓதியுணர்ந்த ஒருபுலவரே யல்லால், ஓதாதுணர்ந்தவர் அல்லரென்பதற்கு அவர்இயற்றிய செய்யுட்களிலிருந்தே சான்றுகள், 252-254. பழையதமிழ்நூல்வழக்கிற் காணப்படாமற் பிற்காலவழக்கிற் காணப்படுஞ் சொற்கள் சொற்றொடர்கள் பல நம்மாழ்வார் பாட்டுகளில் விரவியிருத்தல்; இவ்வாற்றால் இவ்வாழ்வார் கி. பி. 10-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னிருந்தவராதல்; 255. திருஞானசம்பந்தர் இறைவனருளாற் பாடினர்; நம்மாழ்வார் பயிற்சியாற் பாடினர்; மாணிக்கவாசகரும் அருள்வயமாய் நின்றே பாடினர்; 256, 257. நம்மாழ்வார் முழுமுதற்கடவுளிலக்கணம் அறியாமல், பார்ப்பனர் கட்டிவிட்ட மும்மூர்த்திகளை நம்பினர்; அந்நம்பிக்கையிலுள்ளபிழை; அம்மூவருள்ளும் ஒருவரை அவர் முழுமுதற்கடவுளாக்கிய தவறு; திருமால் வழிபாட்டிலும் அவர் உறைத்துநில்லாமல், அச்சத்தாற் சிவபிரானையும்

அவர் வழுத்தினமை; 258-261. முழுமுதற்கடவுள் அம்மையப்பராய் நிற்றலின்உண்மைவிளக்கம், 261-263. படைப்பும் அழிப்பும்எனத் தொழில்கள் இரண்டே உளவல்லால், அவற்றின்மேலுங் காப்புஎன்ப தொன்றில்லையென்பது, 263-265. சம்பந்தர் முதலான சைவசமயாசிரியர் மும்மூர்த்திகளை வழுத்தாமல் அம்மும்மூர்த்திகட்கு மேலான சிவத்தையே முழுமுதற்கடவுளாக வழுத்தினமை; 265, 266. சைவசமயாசிரியர்க்கு முன்னிருந்த சான்றோரும் பிறப்பு இறப்பு இல்லாச் சிவம் ஒன்றையே வழுத்தினரென்பது, 266-268. பிறப்பு இறப்புக்களுடைய உயிர்களையே நம்மாழ்வார் தெய்வமாகத்துணிந்து பாடினமை, 269.

பதினாறும் இயல்

சைவசமயச்சான்றோர்க்கும் பொய்கையாழ்வார்க்கும் உள்ள கருத்தொற்றுமையும், அவர் வழுத்திய சிவந் திருமாலென்னும் முழுமுதற்கடவுள் உண்மையும், 270-286.

மாணிக்கவாசகரும், அப்பரும், பொய்கையாழ்வாருஞ் சிவபெருமானைப் 'புண்ணியன்' என்று வழங்கினமை; பொய்கையாழ்வார் காலமும், அவர் அம்மையப்பருருவினை நேரேகண்ட தெய்வத்தன்மையினராதலும்; இவருஞ் சைவசமயச்சான்றோருந் தாங்கண்ட தெய்வஉருவினைக் கூறுதலில் ஒருங்கொத்தல்; 270-274. தமிழ்ச்சான்றோர் வணங்கிய திருமால் முழுமுதற்கடவுளாதலும், ஆரியப்பார்ப்பனர் வணங்கிய விஷ்ணுவும், அவர்தம் அவதாரங்களுஞ் சிற்றறிவுடைய மக்களேயாதலும்; பாரதராமாயணகதைகள் தமிழ்நாட்டிற் புகுந்தபின், தமிழர்மதம் 'சைவம்,' வைணவம்' என இரண்டாய்ப்பிரிந்தமை; 274-276. பாரதராமாயண கதைப்புரட்டுகளைக் காட்டி, இறைவனுண்மையைநாட்டுதற்கே தமிழ்ச்சான்றோர் சைவபுராணங்கள் ஆகமங்கள் ஆக்கினமை; 276, 277. சிற்றறிவுடையார்க்கு முழுமுதற்கடவுளுண்மைகளை அறிவுறுக்கும்பொருட்டுத் தமிழ்ச்சான்றோர் புனைந்துரைவகையாற் கட்டிய புராணகதைகளே அவர்தம் நோக்கத்திற்கு மாறாய் இஞ்ஞான்று சைவத்திற்கு இழுக்குத்தேடுதல்; திரிபுரம் எரித்த கதையின் நுண்பொருள்; யானைமுகமுடைய பிள்ளையார் பிறப்புக் கூறுங்கதையின் நுண்பொருள்; 278-280 திருமாலுக்குப் பத்துப் பிறவி ஏற்றுங்கதை ஆரியப்பார்ப்பனராற் கட்டப்பட்டமை, 281. திருமால் அம்மைவடிவில் நிற்குங் கடவுளாம் உண்மை; திருமாலை ஆண்வடிவாகக் கருதியதற்குக் காரணம்; 282-284. பண்டைத்

தமிழரது தெய்வக்கொள்கை எல்லாமக்களானுந் தழுவப்படும் பொதுக் கொள்கையென்பதும், அதுவே பின்றைக்காலத்திற் 'சைவசமயம்' எனப்பெயர்பெறலாயிற்றென்பதும், பொய்கையாழ்வார் பேயாழ்வார் இருவருமே பண்டைத்தமிழ்க்கொள்கையின் வழிப்பட்டவரென்பதும், நம்மாழ்வாரோ ஆரியர் கட்டிய புராணமதவழிபட்டு மும்மூர்த்திகளை நம்பினவரென்பதும், 284-286.

பதினேழாம் இயல்

சூடிக்கொடுத்த நாச்சியார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருமங்கையாழ்வார் என்னும் வைணவசமயத்து அடியார்களைப்பற்றிய ஆராய்ச்சியும், இவர்கள் காலம் சைவசமயாசிரியர்காலத்திற்குப் பின்னதாதலும், 286-299.

சூடிக்கொடுத்தநாச்சியாரின் பிறப்பைக்கூறுங்கதைப்பொய்ம்மை; இந்நாச்சியார் முழுமுதற்கடவுளுண்மையை அறிந்தவர் அல்லர்; இவரியற்றிய செய்யுட்களிலும், இவர்தந் தந்தையாரான பெரியாழ்வார் செய்யுட்களிலும் பிற்காலத்துக்கொச்சைத்தமிழ்ச்சொற்கள் வடசொற்கள் கலந்துள்ளமை; இவ்விருவருங் கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்தவர்; 286-288. தொண்டரடிப்பொடியாழ்வார் பாடிய 'திருப்பள்ளியெழுச்சிக்'கும் மாணிக்கவாசகர் அருளிச்செய்த 'திருப்பள்ளியெழுச்சிக்'கும் உள்ளவேறுபாடு; தொண்டரடிப்பொடியாழ்வார் பாடியசெய்யுட்களிற் பிற்காலத்துப் புராணவழக்குகளும் வடசொற்களுங் கலந்தமை; சைவசமயாசிரியர் வழங்கிய சொற்பொருள் வழக்குகளையும் பாவகையினையும் இவர் தழுவிப்பாடினமை; இவருங் கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தே யிருந்தனரென்பது; 288-293. திருமங்கையாழ்வாருங் கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தவரென்பது; முதலாழ்வார் மூவர்காலத்தில் திருமால் கோயில்கள் இருபதுக்குமேல்இல்லை; திருமங்கையாழ்வார் காலத்தில் அவை எண்பத்தைந்தாகப்பெருகிவிட்டன; மாணிக்கவாசகராற் குறிப்பிடப்பட்ட சிவபிரான் திருக்கோயில்கள் ஐம்பத்துநான்கு; ஏனைச்சைவசமயாசிரியர் மூவராற் குறிப்பிடப்பட்ட சிவபிரான்திருக்கோயில்கள் இருநூற்றெழுபத்துநான்கு; 293-295. பழையநாளிற் சிவபிரான்கோயிலினுள்ளேயே திருமாலும் ஒருங்குவைத்து வணங்கப்பட்டமை; 296. பொய்கை, பேய், பூதம் என்னும் முதலாழ்வார் மூவரிற் பொய்கையார் தொண்டைநாடுவிட்டுச் சென்றிலாமையும், ஏனையிருவருந் தமிழ்நாடெங்குமுள்ள திருமால்கோயில்களைச்சென்று

வணங்கினமையும்; திருமங்கையாழ்வார் பாடல்களிற்கலந்த இராமாயணகதைப்பெயர்கள்;297-299.

பதினெட்டாம் இயல்

திருமங்கையாழ்வார்காலமும், வான்மீகிராமாயண ஆராய்ச்சியும், 300-333.

முதலாழ்வார் மூவர்தம் பாடல்களிற் கண்ணன், வாமநன், வராகன், நரசிங்கன்மேற் பாடப்பட்டனவே மிகுந்துள்ளன, இராமன் மேற் பாடப்பட்டன மிகச்சில; இதன்காரணம்; 300. மாபாரதக்கதை தென்னாட்டிற் குடிபுகுந்த ஆரியப்பார்ப்பனரால் வரவரப்பெருக்கியெழுதப்பட்டமை; கண்ணனுக்குக் குழவிக்கால ஆண்மைச்செயல்களைக் கூறுங்கதைகள் மாபாரதத்தின் பழம்பகுதியிற் காணப்படாமை; 301. இராமயணகதையும் அங்ஙனமே பற்பலராற் பெருக்கியெழுதப்பட்டுவந்தமையின், அதன்கண் உள்ளகதைகள் முன்னுக்குப்பின் முரணாய்நிற்றல், 302. வான்மீகிராமாயணத்திற்கு முற்பட்டதாகிய 'தசரஜாதகத்'திற் சொல்லப்பட்ட இராமன்கதையில் இராமன் தெற்கேபோந்த வரலாறு சிறிதுங் குறிக்கப்படாமை; பழந்தமிழ்நூல்களிலும் அக்குறிப்பு இல்லை; வான்மீகிராமாயணத்துக்கும் 'இரகுவம்சத்'துக்கும் உள்ள கதைமாறுபாடு; 303. அகலியை கல்லுருவாக்கப்பட்ட கதை வான்மீகியில் இல்லை; இராமன் மனிதனேயல்லால் விஷ்ணுவின் அவதாரம் அல்லனென்பது வான்மீகியிற் குறிக்கப்பட்டமை; உத்தரகாண்டத்திற்போந்த இராமாவதாரக்கதை வான்மீகிராமாயணத்தொடு முரணுதல்; இராவணன் பத்துத்தலைகளும் இருபதுகைகளும் உடையனென்பது பழைய வான்மீகிராமாயணத்திற் சொல்லப்படவில்லை; பழையதமிழ் நூல்களும் அங்ஙனம் உரையாமை; உத்தரகாண்டப்பகுதி பின்வந்தோராற் படைத்துச்சேர்க்கப்பட்டது; பம்பாயிற் பதிக்கப்பட்ட வான்மீகிராமாயணத்துக்கும் வங்காளத்திற்பதிக்கப்பட்ட வான்மீகிராமாயணத்துக்கும் உள்ள பலவேறுபாடுகளும் மாறுபாடுகளும்; தமிழிற் பிற்காலத்தெழுதப்பட்டகம்பராமாயணம் இன்னும் பலப்பல பிறழ்ச்சிகளுடையது; 304-307. திருஞானசம்பந்தர் முதலான சைவசமயாசிரியர் பத்துத்தலைஇராவணன் கதையையெடுத்துப்பாடுதல்கொண்டு அக்கதை உண்மையாதல் செல்லாமைக்குக் காரணம்; பொய்யான கதைகளால் மக்களைத் தெய்வமாக்கும் ஆரியப்பார்ப்பனர் தீச்செயலை, முள்ளை முள்ளாற்களைதல்போல், முழுமுதற்கடவுளியல்புகளைத்தெரிக்கும் புனைந்துரைகதைகளாற்களைதலே சை

வாசிரியர் நோக்கமென்பது; 307-311. முருகன் சூரனைவென்றஉண் மைக்கதையொன்று தென்னாட்டின்கண் வழங்குதலை, அங்குவந்து குடியேறிய ஆரியப்பார்ப்பனர்கண்டு, அதனையே இராமன் கதையாகத்திரித்துக்கட்டிவிட்டமைக்குச்சான்றுகள்; 311–315. கந்தபுராணத்திற்சொல்லப்படும் 'முருகன்கதை' முழுமுதற்கடவுளாகிய முருகப்பிரானைப்பற்றியதன்றென்பதும், வடநாடாண்ட அரசன்ஒருவனையே பற்றியதாமென்பதும்; தடாதகைப்பிராட்டியார் கதையும் இங்ஙனமே இறைவியைப்பற்றியதன்று; 316. தக்கன்வேள்விதகர்த்த வீரபத்திரரும், தாருகாவன இருடிகளின் செருக்கடக்கிய பிட்சாடனரும் அங்ஙனமே முழுமுதற்கடவுளாகாமை; இவரெல்லாஞ் சிவபிரான்மாட்டு அன்புபூண்ட விடலைமறவரும் அருந்தவத்தோரும் ஆகல்; எல்லாம் வல்ல முழுமுதற் சிவம் இவர்க்கெல்லாம் அப்பாற்பட்டதென்னும் அறிவுநூல்கள்; 317. சூரனைக்கொன்ற முருகன் எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளான 'முருகவேள்' அல்லனென்பதற்கு மிகப்பழைய தமிழ்நூற்சான்றுகள், 318, 319. பரிபாடலிற் சொல்லப்பட்ட முருகன் பிறப்பின் உண்மை, 320, 321. இந்திரன் என்னும் ஆரியஅரசனும் அவனைச்சார்ந்த ஆரியர்களும், ஆற்றலிற்சிறந்த தமிழ்வேந்தனை முருகனைத் தம்வயப்படுத்திய சூழ்ச்சி; சூரன் என்பான் ஆரியரின் வெறியாட்டு வேள்விகளை யழித்த தென்னாட்டரசனாதல்பற்றி, வட ஆரியர் முருகனென்னுந் தமிழ்வேந்தனையே அவற்குப் பகைவனாக்கொணர்ந்து அவனைஅழித்தமை; அதன்பின் அவ்வாரியர், முருகனுஞ் சிவபிரானடியனாப்த் தமிழ்மன்னனாயிருத்தல் கண்டு, அவன் செய்த ஆண்மைச்செயலை இராமன் செய்ததாகமாற்றி இராமாயணகதை படைத்தமை; அதற்குமாறாய்ச்சைவசமயச்சான்றோர்கள் 'உத்தரகாண்டம்' ஆக்கினமை; 322-324. பத்துத்தலையிராவணன் சிவபிரானிருந்த நொடித்தான்மலையைப் பெயர்த்தெடுத்து உடல்நெரிவுண்டகதை ஆசிரியர் கபிலராற் குறிஞ்சிக்கலியிற் குறிக்கப்பட்டிருத்தல்கொண்டு, அக்கதை மிகப்பழையதென்பாருரை பொருந்தாமை; இதைக்குறித்த ஆசிரியர் கபிலரின் கால ஆராய்ச்சி; கபிலர்க்குநண்பரான பரணரென்னும் புலவர் பெருமான் இருந்தகாலங் கி. பி. முதல்நூற்றாண்டின் இடையிலிருந்து இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதிவரையிலென்பது; 324-326. கபிலர் முதியராயிருந்தகாலத்துப் பரணர் இளைஞராயிருந்தனரென்பதுங், கபிலரது காலங் கி. பி. முதல்நூற்றாண்டின் முற்பகுதியிற்படுதலும், 327, 328. இவ்வாற்றால் இராவணன் நொடித்

தான் மலையைப்பெயர்த்த உத்தரகாண்டக்கதை கி. மு. முதல்நூற்றாண்டுக்குமுற்பட்டதாகாமை, 329. இராமனைத்திருமாலவதாரமாகக்கொண்டு அவனைத்தமிழ்நாட்டவர் வணங்கலானது கி. பி. 7-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னதாதல்; இதற்குக் கற்றச்சுக்குறிப்பின் சான்று; வான்மீகிராமாயணம் 7-ஆம் நூற்றாண்டிற்குப்பின்னரே தமிழ்நாட்டிற் பரவினமை; முதலாழ்வார் மூவர் பாடல்களிலுங் கண்ணன், நாசிங்கன், வாமனன் என்பார் மிகுத்து வழுத்தப்பட்டாற்போல் இராமன் வழுத்தப்படாமை; இராமாயணகதைக்குறிப்புகளைத் தம்முடைய பாட்டுகளில் விரித்துப்பாடிய திருமங்கையாழ்வார், குலசேகரஆழ்வார் முதலான ஏனைஆழ்வார்களின் காலங் கி. பி. 8-ஆம்நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாதல்; 329-333.

பத்தொன்பதாம் இயல்

திருமங்கையாழ்வார் இருந்த காலத்திட்டமும், பழையவடநூல்களிலெல்லாஞ் சிவபிரான் முழுமுதற்றன்மையே நுவலப்படுதலும், 333-372.

'நந்திப்போத்தவர்மன்' அரசாண்டகாலம்; இவ்வரசற்கு முன்னிருந்த பல்லவமன்னர்களை, அவர்தமக்குப் பகைவரான தக்கணசாளுக்கியர் வெல்லமாட்டாதிருந்தும், இவன், தன்காலத்திருந்த சாளுக்கியவேந்தனை இரண்டாம் விக்கிரமாதித்தனாலும், இவன்மகன் 'தந்திவர்ம'னும் அங்ஙனமே ராஷ்ட்ர கூடமன்னன் மூன்றாங்கோவிந்தனாலும் வெல்லப்பட்டமை; இவ்வாறு பல்லவராட்சி சீர்குலைந்த நிலைமையினைச் சுந்தரமூர்த்திநாயனார் குறிப்பிட்டமை; இவ்வாற்றால் துணியப்படுஞ் சுந்தரமூர்த்திநாயனார் காலம்; 333-336. திருமங்கையாழ்வார் தம் பதிகங்களிற் குறிப்பிட்ட பல்லவவேந்தன், 'நந்திக்கலம்பகங்'கொண்ட மூன்றாம் நந்திவர்மபல்லவன் ஆவனென்பது; திருமங்கையாழ்வார் இவன்காலத்திற்குச் சிறிதுபின்னே, 'வைரமேக பல்லவன்' காலத்திருந்தனரென்பதற்குச் சான்றுகள்; 336-339. கண்ணன் வாணனை அழித்தகதையைத் திருமங்கையாழ்வாரும் முதலாழ்வாரான பேயாழ்வாரும் எடுத்தாளும்வகையில், திருமங்கையாழ்வார் கூறுவது சிவபிரானை இழித்துரைக்கும் இயல்பிற்றாதலும், பேயாழ்வார் கூறுவது அவ்வியல்பிற்றன்றாதலும்; இவ்வாற்றால் முதலாழ்வார் காலத்தில் இல்லாத சைவப்பகைமை திருமங்கையாழ்வார் காலத்தும் அவர்க்குப்பின் வந்த வைணவர் காலத்தும் வரவாமிகுந்தமை அறியப்படுமென்பது; திருமங்கையாரைவிடத் திருமழிசையாழ்வார் சிவத்தின்மேற் கொடும்

பகைகொண்டுபோடினமை; சைவசமய ஆசிரியர்களாற் பௌத்தசமண மதங்கள் ஒடுக்கப்பட்டபின், வைணவமதங் கிளர்ச்சிபெற்றமை; திருமழிசையாழ்வார் பாடல்களிற் காணப்படும் இழிசொற்களும் வடசொற்களும்; திருமழிசையாழ்வார் காலங் கி. பி. 10-ஆம் நூற்றாண்டென்பது; 339-343. பிற்காலத்து வைணவப்புலவர் வடமொழியினையே பெரிதுகொண்டாடித் தமிழையுஞ் சைவசமயத்தையுங் கீழறுக்கலானமையுஞ், சைவசமயச்சான்றோர்கள் இற்றைஞான்றுவரை தமிழைப் பாதுகாத்துவருதலும்; பௌத்தம், சமணம், மாயாவாதம், வைணவம் என்னும் மதங்கள் தமிழ்நாட்டவர்க்குப் புறம்பாதல்பற்றியே அவைபுறச்சமயம் எனப் பொதுநூலுள்ளுங் குறிக்கப்பட்டமை; சிவபிரானை இகழும் வாணன்கதை கி. பி. 10-ஆம் நூற்றாண்டிற் புதிதாக வைணவர்களாற் படைக்கப்பட்டுப் பாரதத்தில் நுழைக்கப்பட்டமை; 343-346. வடமொழிப் பழம்புராண கதைகளான 'மற்சம்,' 'வாயு' என்பன சிவபிரான் முழுமுதற்றன்மையினையே நாட்டுகின்றன; இவற்றிற்குப் பின்வந்த அக்கி, இலிங்கம், ஸ்கந்தம், வாமநம், கூர்மம், தேவிபாகவதம், பிரமாண்டம், மார்க்கண்டேயம், பவிஷ்யம் முதலான புராணங்களுஞ் சிவபிரான்றன் முழுமுதன் மாட்சியினையே எடுத்து விரிக்கின்றன; 347. விஷ்ணுபுராணம், பிரமபுராணம், பத்மபுராணம், விஷ்ணுபாகவதம், நாரதபுராணம், பிரமவைவர்த்தபுராணம், வராகபுராணம், கருடபுராணம் முதலாயின கி. பி. 10-ஆம் நூற்றாண்டிலிருந்து இயற்றப்பட்டமையும், அவை பழைய பதினெண்புராணங்களிற்சேராமையும், சிவபிரான்றன் மாட்சிவிரிக்கும் பழையபுராணங்கள் கி. பி. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து 6-ஆம் நூற்றாண்டுவரையில் இயற்றப்பட்டனவாதலும், 347-349. புராணங்களினும் முற்பட்டது 'வான்மீகிராமாயணம்' என்பதும், இதன்கட் பலஇடங்களிலுந் தேவர்கள் சிவபிரானையும் அம்மையையும் வழுத்திப் பேறுபெற்றமை நுவலப்பட்டிருக்கின்றது என்பதும், விஷ்ணுபாதத்திலிருந்து வீழ்ந்த கங்கையைச் சிவபிரான் முடிமேல் ஏற்றனர் எனத் திருமழிசையாழ்வார் ஒருபொய்யானகதை கட்டிச் சிவத்தை இகழ்ந்தனர் என்பதும், 'விஷ்ணுபாதம்' என்னுஞ்சொற்றொடரின் உண்மைப்பொருளும், விஷ்ணு மூவுலகளந்தகதையின் உண்மையும், திருப்பாற்கடல் கடைந்தகாலத்தெழுந்த நஞ்சைப்பருகித் தம்மையெல்லாங்காக்கும்படி விஷ்ணு சிவபிரானைவேண்டினமையுஞ், சிவபிரான் தக்கன்வேள்வி தகர்த்தமையும், 349-353. வான்மீகிராமாயணத்திற்கு முற்பட்டது 'மாபாரதம்' ஆத

லும், அதன்கட் சிவபிரான்றன் இறைமைத்தன்மையைநாட்டும் பழம்பகுதிகளும், வைணவர்கள் புதிதாகக்கட்டி அதனிடையிடையே புகுத்திய புதுப்பகுதிகளும், அவற்றுட் சிவபிரானை வாணன்கதையில் தொடர்புபடுத்திய பொய்க்கதையும்ஒன்றாதலும், 353-357. சிவபிரான்றன் முழுமுதன்மாட்சியினை விரிக்கும் மாபாரதப்பகுதிகள் பழையனவென்றற்கு, மாபாரதத்தினும் பழையதாகிய 'கேனோபநிடதத்'திற் சான்று, 357–359. உபநிடதங்களினும்பழையனவாகிய 'ஐதரேயபிராமணம்,' 'கௌஷீதகிபிராமணம்,' 'சதபதபிராமணம்' என்பவற்றுள்ளுஞ் சிவபிரானே முழுமுதற்கடவுளாதலும், பிரஜாபதி, விஷ்ணு முதலானதேவர்கள் சிற்றுயிர்களேயாதலுந் தெரிக்கப்பட்டமை, 360-362. வடமொழிநூல்கள் எல்லாவற்றுள்ளும்மிகப்பழையதாகிய 'இருக்குவேதத்'திற்சிவபிரானே 'உருத்திரன்' எனும்பெயரால் முழுமுதற்கடவுளாக வைத்துத் தெளித்தோதப்பட்டமை, 362,363. பழையவடநூல்களெல்லாஞ் சிவபிரான்றன் முழுமுதற்றன்மையினை நாட்டுதலில் ஒருமுகமாய் ஒத்துநிற்க, அவற்றிற்கு மாறாக விஷ்ணுவையும் விஷ்ணுவின் அவதாரங்களாகக் கண்ணன் இராமனையும் உயர்த்துக்கூறிச் சிவபிரானை இழிக்கும் மாபாரதப்பகுதிகள் ஒருசிலவும், விஷ்ணுபுராணம், பாத்மோத்தரம், வைணவபாகவதம், பிரமாண்டபுராணம், இராமோபநிஷதம், நாராயணோபநிஷதம், ஆத்மோபநிஷதம், ஆங்கீரஸோபநிஷதம், மனோபநிஷதம், பைங்களோபநிஷதம் முதலியனவுங் கி. பி. 9-ஆம் நூற்றாண்டுக்குப்பின் பொய்க்கதை புனைந்து இந்துமக்களின் ஒற்றுமைநலத்து மதச்சண்டை விளைக்க வைணவர்களாற் கட்டப்பட்ட புரட்டுநூல்களாதல், 364,365. சிவபிரான் திரிபுரமெரித்ததையும், நஞ்சமுண்டதையுந், தக்கன்வேள்விதகர்த்ததையுந் திருமங்கையாழ்வாரே தம்பாடல்களில் எடுத்துரைக்கின்றார், 365,356. சிவபிரானுந்திருமாலும் பிரிவின்றி ஒருவடிவினராயிருத்தலையும் அவர் பலகாற் பாடுகின்றார்; இவ்வாழ்வார் தமது இறுதிக்காலத்திற் பாடிய 'பெரியதிருமடல்' என்னும்பாட்டிற் சிவபிரான்றன் முழுமுதற்றன்மையை எடுத்தோதி அகங்கரைந்துருகுகின்றார்; 367, 368. பரசுராமனைத்திருமாலவதாரமாக்கி, அவன்அரசர்கூட்டத்தை இருபத்தொருமுறை அழித்ததாகப் பார்ப்பனர் ஒருபொய்க்கதை கட்டலானது கி. பி. 9-ஆம்நூற்றாண்டில் நிகழ்ந்ததென்பது, 369. 'திவாகரநிகண்'டின் திட்டமான காலங் கி. பி. 10-ஆம் நூற்றாண்டென்பதும், முதலாழ்வார் மூவருந் தம்பாடல்களிற் பரசுராமனைக் குறித்திலரென்பதுங், 'கற்கியவதார'

மும் அங்ஙனமே 10-ஆம் நூற்றாண்டுமுதற் படைக்கப்பட்டதென்பதும், பரசுராமஅற்கியவதாரங்களைத் தம்பாடல்களில் வழுத்திய திருமங்கையாழ்வார் கி. பி. 10-ஆம் நூற்றாண்டிற்கு முன்னிருந்தவராதல் செல்லாதென்பதும், பரசுராமனை வணங்கிப்பாடாத குலசேகர ஆழ்வார் திருமங்கையாழ்வார்க்குமுன்னும், இவரைப்போல் அப்பரசுராமனை வணங்கிப்பாடிய பெரியாழ்வாருஞ் சடகோபருந் திருமங்கையாழ்வார்காலத்தோ அல்லதவர்க்குச் சிறிதுபின்னே இருந்தாராவரென்பதும், 370-372.

இருபதாம் இயல்

பன்னீராழ்வார்களின் காலவரையறை, 372-420.

பொய்கைபேய் என்னும் ஆழ்வாரிருவரும் ஒருகாலத்தினராய்க் கி. பி. 8-ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் பூதத்தாழ்வார் அவர்க்குப்பின்னே அந்நூற்றாண்டின்நடுவிலும் இருந்ததற்குச்சான்றுகள், 3/2,373. குலசேகர ஆழ்வார் வரலாறுங் காலமும் 373. 374. தொண்டரடிப்பொடியாழ்வாருங் குலசேகரரும் ஒரேகாலத்தினர், 374, 375. திருமழிசையாழ்வார், திருப்பாணாழ்வார் காலம், 375. திருமங்கையாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வாரைக்கண்டு தொழுதமை, 375. திருமங்கையாழ்வார்தம் முதுமைக்காலஇயற்கை, 376. பெரியாழ்வார், சூடிக்கொடுத்தநாச்சியாரின் காலம்; சூடிக்கொடுத்த நாச்சியார் 'திருவாசகத்'தை நன்குபயின் றவரென்பதற்குச் சான்றுகள்; 376-378. நம்மாழ்வாரென்னுஞ் சடகோபரின் காலம்; பெரியவாச்சான்பிள்ளை முதலான நாலாயிரப்பிரபந்த உரைகாரர் காலத்துக்குச் சிறிதுமுன்னே இவர் இருந்தமைக்குச் சான்றுகள்; இவர்காலத்தில் உண்டான இலக்கண வழுச்சொற்கள் இவர்தம்பாடல்களிற்கலந்தமை; 378, 379. 'களவழி' பாடியபொய்கையாரும், 'இன்னிலை' பாடியபொய்கையாரும், பொய்கையாழ்வாரும் வெவ்வேறு காலத்திருந்தவரென்பதற்குச் சான்றுகள், 379-389. 'இன்னிலை'யைப்பதிப்பித்தவர், இன்னிலையாசிரியர்பொய்கையாரும் பொய்கையாழ்வாரும் ஒருவரேயென்று நாட்டுதற்குப் புகுந்து, அவரின்வேறான 'களவழி' பாடிய பொய்கையாரை இழித்துப்பேசியவை பொருந்தாவென்பது, 389-396. பொய்கையாழ்வார் பாடிய பாட்டின் றன்மை, 396, 397. 'இன்னிலைச்' செய்யுள்கட்கும் 'முதற்றிருவந்தாதிச்' செய்யுள்கட்கும் இன்னிலைப்பதிப்புரைகாரர் காட்டிய ஒற்றுமை பொருந்தாமையின் அந்நூல்களை இயற்றிய பொய்கையார் இருவரும் வெவ்வேறுகாலத்தவரென்பதுங், 'களவழி' இயற்

றியபொய்கையார் இவ்விருவர்க்கும் முற்பட்டவரென்பதும், 397-400. 'இன்னிலை' இயற்றியபொய்கையார் கி. பி. 2-ஆம் நூற்றூண்டிற்கு முற்பட்டவரல்லரென்பதற்குப் பின்னும் ஒருசான்று, 400, 401. 'முதற்றிருவந்தாதிக்'கும் 'இன்னிலைக்'கும் இன்னிலைப்பதிப்புரைகாரர் காட்டிய வேறுசில சொல்லொற்றுமை பொருளொற்றுமைகளும் பொருந்தாமை, 401-407. பேராசிரியர் தாம் தொல்காப்பியச் செய்யுளியலுக்கு எழுதியஉரையிற் பொய்கையாழ்வாரது முதற்றிருவந்தாதியை எடுத்துக்கூறியதுகொண்டு அதனைக் கடைச்சங்கநூலாகத் துணிந்தார்தம் பிழைபாடு, 407, 408. இளம்பூரணர், பேராசிரியர் என்னுந் தொல்காப்பியஉரையாசிரியர் இருவரும் இருந்தகாலவரையறைகள், 409, 410. 'கைலைபாதிகாளத்திபாதியந்தாதி' பாடிய நக்கீரர், கடைச்சங்ககாலத்துக் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர் அல்லரென்பது; 'இன்னிலை' பாடியபொய்கையார் கி. பி. 2-ஆம்நூற்றூண்டிலும், 'முதற்றிருவந்தாதி' பாடியபொய்கையாழ்வார் கி. பி. 8-ஆம்நூற்றூண்டிலும் இருந்தாரென்பது; 410, 411. 'களவழி' பாடியபொய்கையார் இவ்விருவர்க்கும் முன்னே கி. பி. முதல்நூற்றூண்டில் இருந்தமைக்குச்சான்றுகள், 411, 412. ஆழ்வார்களெல்லாருஞ், சைவசமயாசிரியர் அருளிச்செய்த தேவாரதிருவாசகங்களை நன்குபயின்று அவற்றின் சொற்பொருட்பா நலங்களைப்பொன்னேபோற்போற்றி அவைதம்மிற் சிலபலவற்றைத் தம்பாடல்களிற்றழீஇயமைத்தனரென்பதற்குச்சான்றுகள், 413, 414. திருமங்கையாழ்வார்தேவாரதிருவாசகங்களை நன்குபயின்றவரென்பதற்குச் சிலகுறிப்புகள், 415-418. திருஞானசம்பந்தர்க்கு 250-ஆண்டு பிற்பட்டிருந்த திருமங்கையாழ்வார், சம்பந்தப்பெருமானைக்கண்டு அவரொடுவழக்கிட்டனரென வைணவப்புலவர் கட்டிவிட்டகதை முழுப்பொய்யாதல்; சீநிவாச ஐயங்கார் வைணவர் கதைகள் அத்தனையும் பொய்யென்றுலைரத்தமை; மாணிக்கவாசகர் நாலாயிரப்பிரபந்தத்தைப்பார்த்துத் திருவாசகம் பாடினரெனத் 'தமிழ் வரலாறு' எழுதினவர்உரைத்தஉரை ஆராய்ச்சியில்லாத் தலைதடுமாற்ற உரையென்பது; 420.

இருபத்தோராம் இயல்

மாணிக்கவாசகர் குறித்த கடைச்சங்ககால ஆராய்ச்சி 420-470. மதுரையிலிருந்த கடைச்சங்கங் கி. பி. 8-ஆம் நூற்றூண்டின்கண் இருந்ததாகலின், அதனைக்குறிப்பிட்ட மாணிக்கவாசகர் அந்நூற்றூண்டுக்குப்பின்னே இருந்தாராகல் வேண்டுமென்றூர் உரையின்பிழை,

420, 421. 'சேரன் செங்குட்டுவன்' நூலாரும், 'தென்னிந்தியசைன மதஆராய்ச்சிகள்' நூலாரும் மதுரைத்தமிழ்ச்சங்கங் கி. பி. 5-ஆம்நூற்றுண்டிற்குமுன் இருந்ததாகாதென்று கூறினமை; கி. பி. 470-ஆம் ஆண்டில் 'வஜ்ரநந்தி' என்பார் மதுரையில் ஒருதமிழ்ச்சங்கம் நிறுவினராதலின், கடைச்சங்கம் அதற்குமுற்பட்டதென்பது; கடைச்சங்கம் நிலைகுலைந்தமைக்குக்காரணம்; 421-423. 'உக்கிரப்பெருவழுதி' எனப் பெயர்கொண்ட பாண்டிமன்னர் இருவரின் வரலாறுங் காலமும், 423, 424. கி. பி. 3-ஆம் நூற்றுண்டின் துவக்கத்திலிருந்த உக்கிரப் பெருவழுதிக்குப்பின் அரசுக்குவந்த 'வரகுணபாண்டியன்' காலம் முதல், வடுகக்கருநாடர் சோழமன்னரது துணைபெற்றுப் பாண்டிநாட்டின்மேற் படையெடுத்துவந்து, அவன்றன் பேரன்காலத்திற் பாண்டியரரசைப் பற்றிக்கொண்டமை; பாண்டியரரசு நிலைகுலைந்த 2-ஆம் நூற்றுண்டிற்குப்பின் கடைச்சங்கம் இருந்ததாகாமை; கருநடஅரசர் சமண்மதத்தினரென்பது; கருநடர் ஆட்சி மதுரையிலிருந்தகாலம்; 'வஜ்ரநந்தி' வகுத்ததமிழ்ச்சங்கங் கருநடஅரசரது ஆட்சிமுடிவிற்றேன்றினமை; இவ்வாற்றல் மதுரைக்கடைச்சங்கமிருந்தது கி. பி. 2-ஆம் நூற்றுண்டிற்குமுன்னென்னும் முடிவு; 424-428. மேற்குறிப்பிட்ட 'செங்குட்டுவன்' நூலாரும் பிறரும், வடநாட்டுமோரியர் தென்னுட்டின்மேற் படையெடுத்துவந்தது கி. பி. 4-ஆம் நூற்றுண்டிலென்றும், அம்மோரியர் படையெடுப்பினைத் தமதுபாடலிற் குறிப்பிட்ட மாமூலனுரும் அவரிருந்த கடைச்சங்கமும் 5-ஆம் நூற்றுண்டிலிருந்தாகுமென்றுங் கூறிய பிழைபாட்டுரையின் ஆராய்ச்சி, 428-439. மேலும், அச்செங்குட்டுவன் நூலார், கங்கையாறு பாடலிநகரையழித்தசெய்தி மாமூலனுராற் குறிப்பிடப்பட்டதெனக் காட்டிய உரைப் பொய்ம்மையும், மாமூலனுர் குறித்தசெய்தியின் உண்மையும், 439-441. நக்கீரனுர் சேரன்சேங்குட்டுவன்காலத்தினரென்றுமேற்குறித்த செங்குட்டுவன்நூலார் கூறியது பொருந்தாவுரையாதல், 441-447. இறையனுரகப்பொருளுரை நக்கீரனுர் உரைத்ததன்று என்ற செங்குட்டுவன்நூலாரது கூற்றுப் பிழையாதல் காட்டும்முகத்தால், இறையனுரகப்பொருளுரையில்நக்கீரனுருரைத்தஉரைப்பகுதிகள்இவையென்னும் வரையறையாராய்ச்சி, 447-471.

இருபத்திரண்டாம் இயல்

இறையனுரகப்பொருளுரையாராய்ச்சியின் தொடர்புந், தமிழ்முச்சங்க வரலாறுந், தொல்காப்பியகாலமும், 472-553.

தலைச்சங்கத்திற் சிவபிரான், முருகவேள் இருந்தார் என்னும் வரலாறும், அதுவும் இடைச்சங்க கடைச்சங்கமும் நடைபெற்ற காலவளவை தெரிக்கும் பகுதியும் நக்கீரனாருரையாகாமை, 472, 473. கடைச்சங்க வரலாறும் நச்கீரனார் வரைந்ததன்றென்பது, 473-475. முச்சங்கவரலாறு கூறும் உரைப்பகுதி முற்றும் பொய்யாகாமைக்குச் சான்றுகள்; மாபாரதப்போர் நிகழ்ந்தகாலம் இற்றைக்கு 5000-ஆண்டுகட்குமுன்னரென்பது; தலைச்சங்கம் அழிந்துபட்டதுங் குமரிநாடு கடல்கொண்டதும் இற்றைக்கு 4000-ஆண்டுகட்குமுன்நிகழ்ந்தமைக்குச்சான்றுகள்; 475-479. 'சதபதபிராமணத்'திற் சொல்லப்பட்ட கடல்கோள் பண்டைத்தமிழகமான குமரிநாட்டைக் கவர்ந்ததொன்றே என்பதற்குச் சான்றுகள், 479, 480. பாரதப்போரிற் பாண்டவர்படைக்குச் சோறு வழங்கிய 'உதியஞ்சேரல'னும் அவனைப்பாடிய 'முரஞ்சியூர்முடிநாகராயர்' என்னும் புலவர்பெருமானுங் கிறித்துவுக்குமுன் 3101-ஆம் ஆண்டிலிருந்தன ரென்பது, 480, 481.

ஆசிரியர் தொல்காப்பியனாரைச்சமண்மதத்தவர் என்றுரையும், அவர் கி.மு. 3 அல்லது 4-ஆம் நூற்றாண்டிலிருந்தா ரென்றுரையும், அவர் கி. பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்தா ரென்றுரையும் ஒன்றினொன்று மாறான பெரும்பிழைபாட்டுரைகளாதல் காட்டும்முகத்தால் விரிந்தபோராய்ச்சியின் முதற்பகுதி, 481-553.

'படிமை' என்னுஞ்சொல் 'ப்ரதிமா' என்னும் வடசொற்றிரிபாய்த் 'தெய்வத்தோடொத்தவடி'வினையும், 'அருந்தவத்தோர்'வடிவினையும், 'அருந்தவவொழுக்கத்'தினையும் உணர்த்துமென்பது, 485. அந்தணரின் தவவொழுக்கமே பண்டைத்தமிழ்நூல்களிற் 'படிவம்' எனப்பட்டமை, 486. அந்தணர் தவவடிவம் இறைவன்வடிவத்தை யொத்தமை; 'கொடிநிலை,' 'கந்தழி,' 'வள்ளி' என்னும் மூன்றும் முத்தீக்கள் ஆதல்; இவற்றை ஞாயிறு தீ திங்கள் எனவெளிப்படைச் சொற்களால் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறாதகாரணம்; 486-492. முத்தீவழிபாடு கடவுள்வழிபாட்டையொப்பது; தமிழந்தணர் ஆற்றிய முத்தீவேள்வியின் வரலாறு; முத்தீவழிபாட்டை முதன்முதற் கண்டறிந்தவர் பண்டைத்தமிழ்மக்களேயென்பதற்குத் தமிழ்வடநூற்சான்றுகள்; 492-495. இருக்குவேதத்திற்சொல்லப்பட்ட 'பரதர்' என்பார் தமிழ்நாகரிகமக்களென்பதும், அவர் ஆண்ட இந்நாடு 'பரதகண்டம்' எனப்பெயர்பெற்றமையும்; வடக்கிருந்துவந்த ஆரியர்இவ்விந்தியநாட்டுட் புகாதபடி இப்பரதர் எதிர்த்துநின்றமை; பாரதர்க்குதவியாக நின்ற

பக்தர்கள், பலாநர்கள், அலிநர்கள், சிவர்கள், விஷாணியர்கள் என்பார்
ஐவகைப் பழந்தமிழ்க்குடிகளாம் உண்மை; ஆரியர் தமிழரைவென்ரு
ரென்னும்உரை பொய்யென்று ஐரோப்பியஆசிரியரான ‘ராகொசின்’
விளக்கினமை; 496-500. வசிட்டமரபினரே ஆரியராதலும், விசுவா
மித்திரமரபினர் தமிழராதலும், சிவபிரான்வழிபாட்டை ஆரியர்இகழா
நிற்கத் தமிழர் அதனை விடாப் பிடியாய்க்கொண் டொழுகினமையும்,
501-508. இருக்குவேதகாலத்து ஆரியர் முத்தீவேள்வி வேட்க அறி
யாமையும், எசுர்வேத சாமவேதகாலத்து ஆரியர் அதனைத்தமிழாசிரிய
ருதவிகொண்டு வேட்கலானமையும்; அதனை வேட்கத் தெரிந்தபின்
ஆரியர் அவ்வேள்விகளில் உயிர்க்கொலைபுரிந்து கட்குடித்துச் சிறுதே
வதைகளை வணங்கினரென்பது; தமிழர் வேட்ட வேள்விகள் உயிர்க்
கொலையில்லாது கடவுளைநோக்கிச்செய்தனவாதலும், ஆரியர் வேள்வி
கள் கொலையுங் குடியும்வாய்ந்து சிறுதெய்வங்களை நோக்கிச்செய்தன
வாதலும்; 509-511. ஒரே முழுமுதற்கடவுள் வணக்கத்தை வலியுறுத்
துஞ் சைவசமயாசிரியர் கொள்கைகளுக்குமாருகப், போலிச்சைவர்
கள் ஆரியர் சூழல்களில் அகப்பட்டு ஆரியவேதங்களைப் பகுத்தறிவின்
றிப் பாராட்டும்முறை; ஆரியர்வணங்கிய தெய்வங்கள் சிற்றறிவுடைய
மக்களாதலும், ஆரியநூல்களிற் கூறப்பட்ட ஆரியவொழுக்கங்கள்
தீயவாதலும், அத்தீமையை மறைக்கப் போலிச்சைவர் செய்தமுயற்சி
பயனிலதாதலும், 512-516. வடக்கிருந்துவந்த ஆரியர், நாகரிகத்திற்
சிறந்த தமிழரைத் தாம் வெல்லமாட்டாமை யுணர்ந்து, தம்மைத்தேவ
ரெனவுந் தமதுமொழியைத் தேவமொழியெனவுஞ் சொல்லிப் பல
சூழ்ச்சிகளால் தமிழரைத் தம்வயப்படுத்தித் தமக்கு அடங்கச்செய்தவா
லாறுகள், 516-518. ஆரியர் சூழ்ச்சிகளிற் சிக்காத பண்டைத்தமிழ்
வேந்தர், ஆரியமுறைகளைமறுத்து உண்மைதெருட்டி ‘உபநிடதங்கள்’
இயற்றினமை; தமிழ்முனிவரர் பலர் ஆரியச்சிறுதெய்வ வெறியாட்டு
வேள்விகளைத் தொலைப்பான்வேண்டிச், சிவபிரான்மேற் பலபதிகங்
கள் ஆரியமொழியிலேயேயியற்றி, அவைதம்மை ஆரியநூல்களிற்
சேர்த்தமை; அஞ்ஞான்றைத்தமிழர் ஆரியமும் பேசினமைக்குச்
சான்று; அறிவும்ஆற்றலுஞ்செல்வமும்மிக்க தமிழரைத் தாம் கொண்
டாடுவதுபோற் காட்டி அவரை ‘க்ஷத்திரிய,’ ‘வைசியப்’ பெயர்களால்
வழங்கி, உண்மையில் அவர்களை ஆரியர் தங்கீழ்ப்படுத்தமை; 518,519.
க்ஷத்திரியர், வைசியர்எனத்தாங்கொண்டாடியதமிழரையுந்,தாம்வேண்
டாதகாலங்களில் ‘தஸ்யுக்கள்’ அல்லது ‘சூத்திரர்’ என்று இழிபுபட

அவ்வாரியர்வழங்கினமை; பொருள் அவாவினால் ஆரியர் எத்தகைய கொடுந்தொழிலுஞ்செய்யமுன்வந்தமை; தமிழர்ஆரியர்மாட்டும் இரக்கமுடையராய் ஒழுகினமை; ஆரியவேதத்தின் வேறாகத் தமிழர்க்குத் தெய்வத்தன்மைவாய்ந்த மற்றொருவேதம் இருந்ததென்று 'ஐதரேய பிராமணம்' புகன்றமை; தமிழ்வேந்தரையுந் தமிழ்வகுப்பினர் எல்லாரையும் க்ஷத்திரியரெனக் கொண்டாடிய ஆரியர் பின்னர் அவரைத் 'தஸ்யுக்கள்' என இகழ்ந்தமைக்குச்சான்றுகள்; இஞ்ஞான்றைப்பார்ப்பனரின் ஒழுகலாறுகளும் பண்டைஆரியர்தம் ஒழுகலாறுகளை ஒத்தல்; ஆரியர் வழிப்பட்ட தமிழர் தம்மினத்தவர்க்குச் செய்யுந்தீதுகள்; வடமொழியில் ஆரியர் இயற்றியநூல்கள் இவை, தமிழ்ச்சான்றோர் இயற்றியநூல்கள் இவைஎன்பதும், அவற்றின்பொருள்வேறுபாடும்; 520-528. உலக இயற்கையிற் காணப்படும் ஞாயிறு முதலிய ஒளிப்பொருட்டோற்றமே இறைவனாக வைத்து உருவகப்படுத்தப்பட்டமை; 'சிவன்' 'முருகன்' என்னும் பெயர்ப்பொருட் காரணம்; திருநீறு, முத்தலைவேல், புலித்தோலுடை முதலிய அடையாளங்களின் உண்மைப் பொருள்; 'சேயோன்,' 'மாயோன்' என்னுந் திருவுருவவியல்பு; குமரிநாடு கடல்கொள்ளப்படுதற்குமுன் இறைவனை 'முக்கண்ணன்' என வைத்துத் தமிழர் வணங்கினமை; 529-533. உருத்திரன்மேற் பாடப்பட்ட இருக்குவேதப் பதிகங்கள் சிலவற்றிலுங்கூட இறைவன் 'முக்கண்ணன்' எனக் கூறப்பட்டிலன்; 'சதருத்திரிய'த்திலும் அவன் அங்ஙனங் கூறப்பட்டிலன்; பழைய தமிழ்வடநூல்களில் 'மும்மூர்த்திகள்' நுவலப்படாமை; இறைவனைப் பழநூல்கள் 'சடையன்' என வழங்கினமை; இறைவன் திருமுடிமேற் பிறைவிளங்குதலின் உண்மை; 533-536. அந்தணர்கொண்ட தவவடிவத்தின் உண்மை; 537-539. 'படிமை,' 'படிவம்' என்பன சமணரின் தவவொழுக்கத்தை யுணர்த்துதற்குப் பழைய தமிழ்நூல்களிற் சான்றில்லை; பழைய தமிழ்நூல்களிலெல்லாம் அச்சொற்கள் அந்தணரின் தவவொழுக்கத்தையே உணர்த்துதற்குச் சான்றுகள்; 'அங்குத்தரநிகாயம்' என்னும் புத்தசமய நூலுள்ளும் அந்தணரின் தவக்கோலந், தமிழ்நூல்களிற் சொல்லப்பட்டபடியே காணப்படுகின்றது; 'படிமா' என்னுஞ்சொற் பழைய சமண்நூல்களிற் காணப்படவில்லை; கி. பி. 6-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னெழுந்த சமண்நூல்களிற் காணப்படும் 'படிமா' என்னுஞ் சொல்லும் பொருளுஞ் சைவ அந்தணர்தம் வழக்கிலிருந்து சமண்புத்த வழக்கிற்கு

வந்தமை; ஆசிரியர் தொல்காப்பியனூர் சைவ அந்தண முனிவரென்பது; 540-545. கௌதம சாக்கியரும் மகாவீரருந் தோன்றுதற்கு முன்னமே சாக்கிய வகுப்பினர் சிவபிரானை வணங்கி வந்தமைக்குக் கல்வெட்டுச் சான்று; இறைவனை ஒரு திருவுருவத்தில் அமைத்து வணங்கும் முறை இருக்கு வேதத்திலேயே காணப்படுகின்றது; தெய்வத்தோ டொக்கச் செய்த வடிவம் 'ப்ரதிமா' என எசுர்வேதத்தில் நுவலப்பட்டமை; 545-547. பண்டைச் சைவவேளாள அரசர் கொல்லா அறத்தினர்; கௌதம சாக்கியரும் மகாவீரருந் தமிழ வேளாளமரபிற் பிறந்தவர்; ஆரியர் வடநாடு புகுந்து குடியேறிய போது, அவர்க்கு முன்னேதொட்டு அங்கே பதினறு நாடுகளில் அரசு புரிந்தோர் தமிழவேளாள அரசரேயென்பது; ஐவகை உயிர்ப் பாகுபாடுகள் முதன்முதல் தமிழ்ச் சான்றோரால் வகுக்கப்பட்டது; சமண்முனிவர் வகுத்த நால்வகையுயிர்ப் பாகுபாடு, நிலன் நீர் நெருப்புக் காற்று என்னும் நால்வகையிடத்தைப் பற்றியதென்பது; உயிர்களை இடவகையாற் பகுத்து ஓதாத ஆசிரியர் தொல்காப்பியனூர் சமண்மதத்தின ரல்லரென்பது; 547-551. தொல்காப்பியனூர் சமண் முனிவர் அல்லரென்பதற்குப் பின்னுஞ் சில சான்றுகள்; 551-553.

இருபத்துமூன்றும் இயல்.

தொல்காப்பிய காலத் தொடர்ச்சி, 554-595.

'தொல்காப்பியம்' இடைச்சங்க நூலென்றுருரை பொருந்தாமைக்குச்சான்றுகள்; 'குமரிநாடு' கடல்கொள்ளப்படும் முன் இருந்த 'பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி'யின் காலம்; அவன்மேற் பாடப்பட்ட பழம்பாட்டொன்றில் ஞகாரத்தை முதலாக வுடைய 'ஞமன்' என்னுஞ்சொற் காணப்படுதலுந், தொல்காப்பியனூர் காலத்தில் அத்தகைய சொற்கள் வழங்காமையும்; தொல்காப்பியனூர் தலைச்சங்க காலத்தவர்; 554-555. 'ஐந்திர' வியாகரணஞ் செய்த இந்திரனும், 'அட்டாத்தியாயி' செய்த பாணினியும் ஒரே காலத்தவரென்றுருரையின் பிழை; வடமொழியில் முதல் இலக்கண ஆசிரியன் இந்திரனேயல்லாற், பாணினி அல்லனென்பது; அவ்விந்திரனுக்கும் பாணினிக்கும் இடையே வரிசையில் வந்தார் அறுபத்து நால்வர் இலக்கண ஆசிரியரென்பது; இந்திர ஆசிரியனது காலம் இற்றைக்கு 4500-ஆண்டுகட்கு முன்னதாதல்; தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்திற் குறிக்கப்பட்ட ஐந்திரமாவது, 'காதந்தரம்' அல்லது 'ஜைநேந்திரம்' ஆதல் வேண்டுமென்று ருரையின் பொய்ம்மை;

556-558. பாணினி முனிவர் காலங் கி. மு. 3-ஆம் நூற்றாண்டு என்றுரை பொருந்தாமை; அவரது காலங் கி. மு. 7-ஆம் நூற்றாண்டெனபதே பொருத்தமுடைத்தாதல்; தொல்காப்பியச் சிறப்புப் பாயிரச் செய்யுள் தொல்காப்பியனார் காலத்திலேயே செய்யப்பட்டதென்பது; 559, 560. 'பத்ரபாகு' என்னுஞ் சமண்முனிவர் இயற்றிய 'ஜைநேந்திரமே' சிலப்பதிகாரத்திற் குறிக்கப்பட்டதெனக் கரைந்தார் கூற்றின் பொய்ம்மை, 561-563. சிலப்பதிகாரத்திற் குறிக்கப்பட்டது 'காதந்தரம்' என்னும் வியாகரண நூலாதலுஞ் செல்லாமை; ஆண்டுக் குறிக்கப்பட்டது இந்திரன் எனப்பெயரிய அரசனொருவனாற் செய்யப்பட்டு வீட்டுநூற்பொருளை அறிவுறுத்துவதாமென்பது; 563-564. இலங்கைத்தீவின் வரலாற்றிற் குறிக்கப்பட்ட மூன்று கடல்கோள்களிற் கி. மு. 3-ஆம் நூற்றாண்டில் நேர்ந்த மூன்றாங் கடல்கோளுக்குச் சிறிது முன்னேதான் தொல்காப்பியம் இயற்றப்பட்டதா மென்றார் உரையும் பொருந்தாமை; குமரிநாட்டைக் கவர்ந்த கடல்கோள் முதற்கடல்கோளே யாமென்பதும், அதற்கு முன்னேதான் தொல்காப்பியம் இயற்றப்பட்டதாகு மென்பதும், இதற்குக் குமரிநாட்டிற் செய்யப்பட்டதாகிய 'செங்கோன்றரைச் செலவு' என்னும் நூலினும் 'சிலப்பதிகாரம்' என்னும் நூலினும் அதன் உரையினும் உள்ள சான்றும்; 555-566. இப்போதுள்ள 'இந்தியமாக்கடல்' பல்லாயிர ஆண்டுகட்குமுன் 'குமரிநாடு' எனும் பெருநிலனாபிருந்தமைக்கு ஆங்கில நூலாசிரியர் காட்டுஞ் சான்றுகள்; வட ஆப்பிரிக்காவிலுள்ள 'சகாரா' எனும் பெரும்பாலைநிலங் கடலாயிருந்தஞான்று, இந்திய மாக்கடல் நிலனாயிருந்ததென்பதும், பின்னர் அப்பாலை நிலத்தில் நின்ற பெருநீரே குமரிநாட்டைக் கவர்ந்ததென்பதும், 566-570. மக்கட்டோற்றத்திற்குப் பின் எழுந்த கடல்கோள்களுட் குமரிநாட்டை வாய்ப்பெய்துகொண்ட கடல்கோளே மிகப் பெரியது; அக் கடல்கோளுக்கு முன் இயற்றப்பட்டதே 'தொல்காப்பியம்' என்னும் முடிபு; 570-573. தொல்காப்பியத்துட் போந்த 'ஓரை' என்னுஞ் சொல்லைக் கிரேக்க மொழியெனக் கொண்டு, அவ்வாற்றால் தொல்காப்பிய காலத்தைக் கணக்குச்செய்யப் புகுந்தார்தங் கூற்றுப் பொருந்தாமை; கி. மு. 3-ஆம் நூற்றாண்டிற்குமுன் இயற்றப்பட்ட கிரேக்கநூல் வடநூல்களில் அச்சொற் காணப்படாமை; கி. மு. 2-ஆம் நூற்றாண்டிலிருந்துதான் வான்நூலாராய்ச்சி கிரேக்கருட் டோன்றினமை; 'தொல்காப்பியம்' கி.

மு. 3 ஆம் நூற்றாண்டிற் செய்யப்பட்டதென நாட்டப்புக்கவர், கி. மு. 2-ஆம் நூற்றாண்டிற்கு முன் கிரேக்கமொழியிற் காணப்படாத 'ஓரை' என்னுஞ் சொல்லை அம்மொழிக்கு உரியதெனத் துணிந்த செயலின் இழுக்கு; 'ஓரை' என்பது தூயதமிழ்ச்சொல்லேயா மென்பது; இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகட்கு முன்னமே தமிழ் நாட்டவர்கள் கடல்தாண்டிச் சென்று மேல்நாட்டவர்களுடன் வாணிகம் நடாத்தினமைக்குச் சான்றுகள்; அதனால் தூயதமிழ்ச் சொற்கள் மேல்நாட்டவர் மொழிகளிற் கலந்தனவென்பது; 573-577. பண்டை நாளில் வான்நூலாராய்ச்சி 'பாபிலோனியர்' 'சாலடியர்' பால் இருந்ததென்பாருரை பழுதாதல்; அந்நாளில் இப்பரதநாட்டின்கண்ணும் அவ்வாராய்ச்சி இருந்தமைக்குச் சான்றுகள்; பண்டைத்தமிழர் அறிந்திருந்த 'பகல்வழியளவு', 'மதிவழியளவு' என்னும் இருவகைக் கோளாராய்ச்சியுட், பகல்வழியளவைப் பாபிலோனியர் சாலடியரும், மதிவழியளவை ஆரியரும் அவர்பாற் கற்றறிந்தமைக்குச் சான்றுகள்; 'ஓரை' எனுஞ் சொல்லைக் கிரேக்கரும் ஆரியருந் திரித்து வழங்கினமுறை; 577-587. 'வட்டெழுத்துக்'களிற்பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளின் ஆராய்ச்சியால் தொல்காப்பிய காலத்தை நாட்டப்புகுந்தார் செய்த பிழை; வட்டெழுத்துகள் வடநாட்டில் வழங்கிய 'பிராமி' எழுத்துக்களின் திரிபாகாமை; இதற்கு வரலாற்று நூலாசிரியர் காட்டுஞ் சான்றுகள்; வட்டெழுத்துகள் 6000-ஆண்டுகளாக வழங்குவன; பிராமியெழுத்துகள் 2300-ஆண்டுகளாக வழங்குவன; 587-588. கி. பி. 8-ஆம் நூற்றாண்டுக்குமுன் வட்டெழுத்திற் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றுதானுங் காணப்படாமைக்குக் காரணம்; பண்டைத் தமிழர் நாகரிகம் எட்டுச்சுவடிகளால் நடைபெற்றமை; பண்டைநாளிற் கல்வெட்டுகள் தமிழ்நாட்டில் உண்டாகாதிருந்து, பின்றைநாளில் உண்டானமைக்குக் காரணம்; சமஸ்கிருத மொழியிற் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளுங் கி. பி. 2-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரேதான் உண்டாயினமை; பண்டைக்கால வரலாறுகளை உணர்தற்குப் பண்டைத் தமிழ்ஆரியநூல்களே உதவியாமல்லது, கல்வெட்டுகள் உதவியாகாமை; 588-592. குமரிநாடு கடல்கொள்ளப்படும்முன் 'தொல்காப்பியம்' இயற்றப்பட்டமைக்குப் பின்னுஞ் சில சான்றுகள்; தொல்காப்பியனார் குறித்த வேனிற் காலக் கொடுமையும் பெரும்பாலைநிலமும் இப்போதுள்ள தமிழ்நாட்டில் எங்குங் காணப்படாமையின், அவை வெம்மை மிகுந்த நடுக்

கோட்டை (Equator)ச் சார்ந்து குமரிநாட்டில் இருந்தனவென்பது; பாலைநிலத்துக்குரிய ஒட்டகம் அக்காலத்திருந்த தமிழர்களாற் பெரிது பயன்படுத்தப் பட்டமையின், தொல்காப்பியனார் அவ்விலங்கைக் குறிப்பிட்டனரென்பது; 'ஒட்டகம்' வடநாட்டு விலங்கு அன்று; தொல்காப்பிய காலம் 5500-ஆண்டுகட்கு முன்னென்பது முடிபு; 592-595.

இருபத்து நான்காம் இயல்.

இறையனாரகப்பொருளுரை யாராய்ச்சித் தொடர்பு, 596-624. இடைச் சங்கம் இருந்தது கபாடபுரத்தென்ற இறையனாரகப் பொருட்பாயிர உரை உண்மைவரலாறாதல்; வான்மீகி ராமாயணத்திற் குறிக்கப்பட்ட 'கபாடபுரம்' என்பது திருச்செந்தூர்க்குப் பக்கத்தேயிருந்து கடல்கொண்டழிந்த 'திருச்சீரலைவாய்' என்னும் நகரேயாமென்பது; 596-598. கடைச்சங்கம் நடைபெற்றஞான்று பாண்டிநாடு 12-ஆண்டு மழையின்றி வறந்த வரலாறும் உண்மையாதல்; இதற்குச் சமண்நூற் சான்று; கடைச்சங்கம் நடைபெற்ற காலம் 650-ஆண்டுகளாமென்பது; 598-601. 'இறையனாரகப்பொருள்' வந்த வரலாறு தெரிக்கும் உரைப்பகுதி நக்கீரனார் வரைந்ததாகாமைக்குச் சான்று; 601-606. இறையனாரகப்பொருளுரையின்கண் நக்கீரனார் எடுத்துக்காட்டிய மேற்கோட்செய்யுட்களும், பின்னையோர் எடுத்துக்காட்டாச் சேர்த்த செய்யுட்களும் இவ்வினைவ யென்பது; 603-609. மாணிக்கவாசகர் அருளிச்செய்த 'திருச்சிற்றம்பலக் கோவையார்' செய்யுட்களை மேற்கோளாய் எடாது, வேறு புதிய செய்யுட்களைப் படைத்துப் பின்னையோர் அவ்வுரையிற் சேர்த்தமைக்கு ஏது; புதியவாய்ச் சேர்க்கப்பட்ட கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் அத்தனைக்கும் பாட்டுடைத் தலைவனுவான் 'அவனிசூளாமணிமாறன்' என்னும் பாண்டிமன்னனேயாவன் என்பதற்குச் சான்றுகள்; இம்மன்னன், திருஞானசம்பந்தர் காலத்தவனான 'நின்றசீர் நெடுமாற' பாண்டியனுக்குப் பாட்டனுவனென்பது; அவனிசூளாமணிமாறன்மேற் பாடிய துறைச்செய்யுட்களை அவனது காலத்துப் புலவர் ஒருவர் இறையனாரகப்பொருளுரையிற் சேர்த்தனரென்பது; 'நயப்பு' என்பதற்கு மேற்கோளான துறைச்செய்யுளும் அதன் உரையும் நக்கீரர் செய்தன ஆகா; 609-614. இறையனாரகப்பொருளுரைக் கலித்துறைச் செய்யுட்களிற் குறிப்பிடப்பட்டோன், செப்புப்பட்டையங்களிற் குறிப்பிடப்படும் 'அரிகேசரி பராங்குசனே'

என்பாருரையின் பிழை; அவ்விருவரும் வெவ்வேறு காலத்தவரென்பது; அக்கலித்துறைச் செய்யுட்கள், தென்னாட்டிற் பல்லவராட்சி நிலைபெறுவதற்குமுன் இயற்றப்பட்டன வென்பது; 'மாறன்' என்னும் பெயரடுத்த பாண்டியர் மூவரும் அவரது காலமும்; 'அவனி சூளாமணிமாறன்'றன் மகனான 'சேந்தன்'றன் அவைக்களத்திற் 'சூளாமணி' என்னுஞ் செந்தமிழ்க் காப்பியம் அரங்கேற்றப்பட்டமை; கலித்துறைச் செய்யுட்கள் களவியலுரையிற் செருகப்பட்ட காலம் கி. பி. 6-ஆம் நூற்றாண்டின் இடையிலென்பது; 615-618. 'களவியலுரை' பத்துத்தலைமுறை வரை வாய்ப்பாடமாக வந்ததென்றுரையின் பிழைபாடு; எழுத்தெழுதத் தெரியாத ஆரியர்போலன்றிப், பண்டைத் தமிழர் எழுத்தெழுதத் தெரிந்தவரென்பது; களவியலுரை ஆசிரியர் மாணாக்கர் பரம்பரையில்வந்த வரலாற்றின் உண்மை; மாணாக்கர் வரிசையினைக் கூறும் உரைப்பகுதி நீலகண்டனார் எழுதியிருக்கலாம்; களவியலுரைக் கலித்துறைச் செய்யுட்களைச் சேர்த்தவர் நீலகண்டனார் அல்லரென்பது; நீலகண்டனாரது காலங் கி. பி. 4-ஆம் நூற்றாண்டின் நடுவென்பது; இதுகொண்டு கடைச்சங்கத்திருந்த நக்கீரனாரது காலங் கி.பி. முதல்நூற்றாண்டென்னும் முடிபு; 619-624.

இருபத்தைந்தாம் இயல்.

கடைச்சங்க காலத் தொடர்ச்சி, 624-536.

சேரன்செங்குட்டுவன் தன்னைப் பழித்துப் பேசிய ஆரியமன்னரான 'கனகவிசயர்'மேற் படையெடுத்து வடக்கே சென்றனனென்று, அவனுக்குத் துணைபுரிந்தோர் 'நூற்றுவர்கன்னர்' என்னும் வடபுல மன்னராவரென்று 'சிலப்பதிகாரம்' நுவன்றமை; அவன் திரும்பிப் போந்து கண்ணகிக்குக் கோயில் சமைத்து விழவெடுத்தபோது, அவனாற் சிறைவிடுவிக்கப்பட்ட ஆரியமன்னருங், குடகக்கொங்கரும், மாளுவவேந்தரும், இலங்கைக் கயவாகு மன்னனும் அவ்விழவுக்கு வந்திருந்தனரெனச் 'சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவடிகள் அந்நிகழ்ச்சியினை நேரேகண்டு குறித்தமை; நூற்றுவர் கன்னரும் மாளுவவேந்தரும் வடக்கே வெவ்வேறுநாட்டை யாண்டவரென்பது; 624-626. 'சேரன்செங்குட்டுவன் நூலார்' நூற்றுவர்கன்னரையும் மாளுவ வேந்தரையும் ஒன்றுபடுத்துரைத்த உரையின் பிழை; சமுத்திரகுப்தனும் அவன் மகன் இரண்டாஞ் சந்திரகுப்தனும் அரசாண்ட கி. பி. 4-ஆம் நூற்றாண்டில் மாளுவநாடு குடியரசின்கீழிருந்தது;

இளங்கோவடிகள் காலத்தில் அந்நாடு வேந்தராட்சியில் இருந்தது; வெவ்வேறுகால நிகழ்ச்சிகளைச் 'செங்குட்டுவன் நூலார்' ஒருங்கு குழப்பி வழக்கினமை; அடிகள் குறித்த மாளுவவேந்தர் 'சகசத்திர பதி' மன்னன் ஒருவனும், ஆந்திர அரசனான 'கௌதமீ புத்ர யஜ்ஞ ஸ்ரீ' என்பவனுமே யாவரென்பது; 626-629. இளங்கோவடிகள் நூற்றுவர்கன்னரையும் மாளுவ வேந்தரையுஞ் சிலப்பதிகாரத்தில் வேறுவேறெனக் கொண்டன ரென்பது; 'நூற்றுவர்கன்னர்' கண்ணகி விழவுக்கு வராத காரணம்; இலங்கைக் கயவாகுமன்னன் காலமும், மாளுவ வேந்தரென அடிகள் குறிப்பிட்ட சகசத்திரபதி மன்னன், கௌதமீபுத்ரயஜ்ஞஸ்ரீ என்னும் ஆந்திர மன்னன் இருந்த காலமும் ஒன்றாதற்கு வரலாற்றுநூற் சான்று; இவ்வாற்றாற் கடைச் சங்ககாலங் கி. பி. 2-ஆம் நூற்றாண்டின் நடுவுக்கு முற்பட்டதென் பது; 630-632. முதற்கயவாகு வென்னும் இலங்கையரசன், செங் குட்டுவ வேந்தன் காலத்திருந்தோனாதலை மறுத்தற்குச் 'செங்குட்டு வன் நூலார்' செய்த வெறுமுயற்சி பயன்படாமை; முதற்கயவாகு, சேரன்செங்குட்டுவன் காலத்தினனென்பதற்குப், பழைய இலங்கை வரலாற்று நூல்களிற் சான்று; 633-634 தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தவனான 'திதி யன்' என்னுந் தமிழ்மன்னனையும், இலங்கையை அரசாண்ட 'ததி யன்' என்னுந் தமிழ்மன்னனையும் ஒன்றுபடுத்த முயன்ற 'செங்குட் டுவன் நூலாரது' முயற்சியும் பழுதாதல்; மாணிக்கவாசகர் குறிப் பிட்ட தமிழ்ச்சங்கங் கி. பி. 2-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதென் னும் முடிபு; 634-636.

இருபத்தாறாம் இயல்.

திருத்தொண்டத் தொகையுந் திருவாதவூரடிகளும், 636-660.

திருத்தொண்டத்தொகையிற் போந்த 'பொய்யடிமை யில்லாத புலவ ரைத்' தொகையடியாரென நம்பியாண்டார்நம்பி கொண்டமை, சுந் தரமூர்த்தி நாயனார் கருத்தறிந்து செய்ததாகாது; தொகையடியா ரைத் தொகுத்துக் கூறுவது 'பத்தராய்ப் பணிவார்கள்' என்னுஞ் செய்யுளாதலும், பொய்யடிமையில்லாத புலவரைக் கூறுவது தனி யடியாரைக் கூறுஞ் செய்யுளாதலும்; திருத்தொண்டத்தொகையின் முதற்செய்யுளிலுள்ள "தில்லைவாழந்தணர்" என்னுஞ் சொற் றொடர் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்ததல்லாமை; 'தில்லைவா ழந்தணர்' என்னுஞ் சொற்றொடரினை இறைவன் எடுத்துக்கொடுத்

தானென்பதற்குப் பிறர் கூறுவது; தில்லைவாழந்தணரை முதற் செய்யுள் முதலில் ஆசிரியர் எடுத்தோதிய கருத்து; 637-641. சாதியுயர்வு தாழ்வு குறித்துத் தில்லைவாழந்தணரை முதற்கண்ணும், திருநீலகண்டத்துக் குயவனாரை அவர்க்குப் பின்னும் வைத்து ஆசிரியர் அருளிச்செய்தார் என்பாருரை பொருந்தாமை; முதல்நிற்கும் அச் சொற்றொடர் இறைவ னெடுத்துக்கொடுத்ததாகாமல் ஆசிரியரே அமைத்ததெனக் கொள்வார்க்கும், அது முதல் நிறுத்தப்பட்ட கருத்துப், பின்றொடருந் தனியடியார் வரிசையினின்றும் அதனை வேறு பிரித்தற்கேயெனக் கொள்ளல்வேண்டும்; 642. ஆசிரியர் அருளிய 'பொய்யடிமையில்லாத புலவர்' என்பார் மாணிக்கவாசகப் பெருமானே யாவரென்பது; 643. நாயன்மார் வரலாறுகளை நம்பியாண்டார்நம்பி பொல்லாப்பிள்ளையார்பாற் கேட்டுணர்ந்தார் என்பது கட்டுக்கதையாதற்கு ஏதுக்கள்; 644, 645. சேக்கிழார் காலத்தில் அக்கட்டுக்கதை வழங்கவில்லையென்பது; பெரியபுராணச் சிறப்புப்பாயிரத்திற் சேக்கிழார் செய்த செய்யுட்களும், பிற்காலத்தார் சேர்த்த செய்யுட்களுங் கலந்துநிற்கும் உண்மை; நம்பியாண்டார்நம்பிகள் சிறந்த சிவநேயம் அடியார்நேயம் உடையராயினும், அவரைத் தெய்வப்பெற்றியுடையரெனக் கோடற்குச் சான்றில்லாமை; எத்துணைப் பெரியாரும் பிழைபடுதல் இயல்பு; நம்பிகள் பொருட்டுப் பொல்லாப்பிள்ளையார் நிகழ்த்தியனவாகச் சொல்லப்படும் அற்புதங்களுக்கு நம்பிகள் இயற்றிய நூல்களில் அகச்சான்று சிறிதும் இல்லாமை; இவ்வற்புதங்களைக் கூறுந் 'திருத்தொண்டர் புராணம்' உண்மைநூலாகாமையும், அது சந்தான குரவரான உமாபதிசிவாசாரியார் செய்ததாகாமையும்; 646-649. நம்பியாண்டார் சொல்லை நம்பித், தெய்வப் பெற்றியுடையரான சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருமொழிக் கருத்தைத் திரித்துச் சொல்லுதல் குற்றமாதல்; 'பொய்யடிமையில்லாத புலவர்' என்னுஞ் சொற்றொடர்க்கு நம்பிகள்கொண்ட பொருளைச் சேக்கிழார் தழுவாமை; 650. பொய்யடிமையில்லாத புலவரைச் சேக்கிழார் மாணிக்கவாசகப் பெருமானேயெனத் துணிந்துரையாமையின் ஏது; சுந்தரமூர்த்திகள் காலத்திற்கு முன்னிருந்த தமிழ்ச் சான்றோர், மாணிக்கவாசகரைச் சைவசமயாசிரியராய்க் கொள்ளாமைக்குக்காரணம்; பட்டினத்தடிகள் காலத்திலேதான் அவர் நாலாஞ் சமயகுரவராகச் சேர்க்கப்பட்டன ரென்பது; 651-654. மாணிக்கவாசகர் சமயகுரவரில் நாலாமவராக வைக்கப்பட்டிருப்பது, அவர்

ஏனைமூவர்க்குப் பிற்பட்டவராதல்பற்றி என்ற ‘தமிழ்வாலாறுடையார்’ கூற்றுப் பொருந்தாமை; திருமூலர் அருளிய ‘திருமந்திர நூல்’ மூவர் அருளிய தேவாரத்திற்குப்பின் வைக்கப்பட்டிருத்தல் பற்றி அது பிற்காலத்ததாகாமை; சமயகுரவரில் திருஞானசம்பந்தர் முதல் வைக்கப்பட்டிருப்பது அவர்க்குள்ள தனிப்பெருஞ் சிறப்புப் பற்றியேயல்லால், அவர் அருள் ஒளியில் முதற்கலந்தார், அப்பர் பின் கலந்தாரென்னும் போலியாராய்ச்சிபற்றியன்றென்பது; சேக்கிழார் சம்பந்தரை அப்பரினும் பார்க்கச் சிறப்பித்துக் கூறல்; அப்பருஞ் சம்பந்தரைத் தம்மினும் உயர்ந்தவராக வைத்துப் பாடிய உண்மை; சுந்தரரும் அவர்க்குப் பின்வந்த அடியாரெல்லாருஞ் சம்பந்தரையே மிகுத்தெடுத்து வழுத்துதல்; 654-66).

இருபத்தேழாம் இயல்.

அப்பர் சம்பந்தர் இருந்த காலஆராய்ச்சியும், நால்வரும் அவரருளிய தேவாரதிருவாசகங்களும் நிறுத்தப்பட்ட முறையும் 660-697. அப்பர் சமண் சமயம் விட்டு மீண்டுஞ் சைவ சமயந் தழுவிய காலையில் முதுமைமிக்கிருந்தா ரென்பதற்குச் சான்றுகள்; இவ்வாராய்ச்சியில் ‘தமிழ் வரலாறுடையார்’ செய்த குழறுபாடுகள்; அப்பர் முதன்முதல் திருஞானசம்பந்தப் பெருமானைச் சீர்காழியில் வந்து கண்டு வழுத்தியஞான்று முதுமைமிக்கிருந்தமை; அப்பர் சமண்சமயம் விட்டுச் சைவம் புகுந்தஞான்று முதியரா யிருந்தமைக்கு அகச்சான்று; அப்பருஞ் சம்பந்தரும் அருளிச்செய்த திருப்பதிகத் தொகைக்கணக்கு; இவ்வாற்றால் அப்பர் மீண்டுஞ் சைவஞ் சார்ந்தபின் இருந்த திட்டமான காலம்; 660-667. மேற்காட்டிய வரலாறுகள் கல்வெட்டு ஆராய்ச்சியால் அறியக்கிடக்கும் பல்லவ அரசர் பாண்டிய அரசர் வரலாறுகளானும் உண்மையாதல்; முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் அப்பர் அருளாற் சமண் மதம் விட்டுச் சைவனாகிச் சிவபிரான் திருக்கோயிற் றிருப்பணி செய்தமை; 667-669. சம்பந்தப் பெருமான் முதன்முதல் அப்பரைக் கண்டஞான்றுந், திருப்புகலூரிற் சிறுத்தொண்டரைக் கண்டஞான்றும் நாலாண்டுடைய சிறுமதலையா யிருந்தமைக்குச் சான்று; அவர் மதுரைக்கு எழுந்தருளி மங்கையர்க்கரசியாரைக் கண்டு பாண்டியனுக்கு வெப்புநோய் தீர்த்துச், சமணரை வழக்கில் வென்றஞான்று ஐந்தாண்டு வளர்ந்த சிறுபிள்ளையாயிருந்தன ரென்னும் உண்மை வரலாறும் அதற்கு அகச்சான்று புறச்சான்றுகளும்; 669-673. கூன்

பாண்டியன் சம்பந்தப்பெருமானல் வெப்புநோய் தீர்க்கப்பட்ட காலங் கி. பி. 623-ஆம் ஆண்டென்பதற்குக் கல்வெட்டுச் சான்று; நின்றசீர்நெடுமாற பாண்டியன் நெல்வேலிப் போரில் மாற்றாரை வென்ற காலமும், அவன் இறைவன் திருவடிநீழல் எய்திய காலமும்; நெல்வேலிப் போர்க்களத்தில் நின்றசீர் நெடுமாறனுல் முறியடிக்கப்பட்டுத் தோல்வியுடன் சென்றோன் வடநாட்டுச் சாளுக்கிய வேந்தனை இரண்டாம் புலிகேசனுவ னென்னும் ஆராய்ச்சி; 673-681. இந்நெல்வேலிப்போர் நிகழ்ந்தது, திருஞானசம்பந்தப் பெருமானுல் வெப்புநோயுஞ் சமண்நோயும் நீங்கி, நின்றசீர்நெடுமாறன் சைவ சமயத்தைத் தழுவியபின்னரே யாமென்பது; சம்பந்தர் கி. பி. 636 அல்லது 638-ஆம் ஆண்டில் அருளொளியிற் கலந்தமைக்கும்,அதற்கு நாலாண்டுகளின்முன், அதாவது கி.பி. 632 அல்லது 634-ஆம் ஆண்டில் அப்பர் அருளொளியிற்கலந்தமைக்குஞ்சான்றுகள்; 'தமிழ்வரலாறுடையார்' இவ்வுண்மைகளை மாறுபடுத்திப் பிழைபட்டமை; 681-683. சம்பந்தப்பிள்ளையார்க்குப் பூணூற்சடங்கு நடத்தப்பட்டகாலையில் அவர் எழாண்டுடையராயிருந்தா ரென்ற 'தமிழ்வரலாறுடையா'ரின் கூற்றுப் பிழையாதல்; சம்பந்தர் திருச்செங்காட்டங்குடிக்குச் சென்ற காலங் கி. பி. 646-ஆம் ஆண்டென்ற அவர் கூற்றும் பிழைபடுதல்; வாதாவிப்போர் நிகழ்ச்சிக்கு முன்னமே சிறுத்தொண்டரையுஞ் சீராளரையுஞ் சம்பந்தப் பெருமான் கண்டளவளாவினமை ஆராய்ச்சியிற் புலனுதலின், இவ்வுண்மையைப் பெரியபுராணந் திரித்துரைத்துப் பிழைபட்டமை; சம்பந்தர் திருச்செங்காட்டங்குடிக்குச் சென்றது கி. பி. 622-ம் ஆண்டென்பது; சம்பந்தர்க்கு முன்னமே அப்பர் அருளிற் கலந்தமையின், சம்பந்தர் திருமணத்திற்கு வந்திருந்த அடியார் பெயர் வரிசையில் அப்பரின் பெயர் காணப்படவில்லை யென்பது; மாணிக்கவாசகர் ஏனைமூவர்க்கும் பின்வைக்கப்பட்டது அவர் அவர்தங்காலத்திற்குப் பின்னே இருந்தமையால் அன்று என்பது; 683-690. தேவார திருவாசகம் முதலிய தமிழ்மறைகள், ஆரிய வேதாகம வரிசையோ டொப்பவைத்து முறைப்படுத்தப்பட்டமை; தமிழ்மறை அருளிச்செய்த ஆசிரியரும் அந்நூல்வரிசைக் கிணங்கவே,முன்பின்னுக வைக்கப்பட்ட உண்மை; 690-692. மாணிக்கவாசகர் வடநாட்டின்கணிருந்து தமிழ்நாட்டிற் குடிபுகுந்து வைகிய வீர சைவ மரபிற் ருேன்றியவர் என்பதற்குச் சான்றுகள்; மாணிக்கவாசகரின் முன்னேர்கள் 'கஞ்சம்' மாகாணத்தின்கண் உள்ள

'மகேந்திரமலைப்' பக்கத்திருந்தவர்களென்பது; கைலாயமலை வேறு மகேந்திரமலை வேறென்பது; கைலையில் இறைவன் செய்த அருட் செயல்களை அவன் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் இடங்களிலும் நிகழ்ந்தனவாகக் கூறும் ஆன்றோர் மரபு; தமிழகத் துச் சொற்கள் அல்லாத வடுகுமொழிச் சொற்கள் திருவாசகத்தின் கட்காணப்படுதல்; சிவலிங்க அருட்குறியினைத் தம்மேனிமேல் அணி யும் வீரசைவ மரபினரின் அடையாளம் மாணிக்கவாசகர்பாலுங் காணப்படுதற்கு அகச்சான்று; திருத்தொண்டத் தொகையுட் போந்த 'பொய்யடிமையில்லாதபுலவர்' மாணிக்கவாசகரே யாவரென்னும் முடிபு; 692-697.

இருபத்தெட்டாம் இயல்.

மாணிக்கவாசகர் காலத்திட்டத்திற்குப் பின்னுஞ் சில சான்று கள் காட்டி முடித்தல், 697-728.

இறையனாரகப்பொருளுரையாசிரியரான நக்கீரனார், மாணிக்கவாச கர்க்கு முன்னிருந்தவராகலின், அவர் தமதுரையில் 'திருச்சிற்றம் பலக்கோவையார்' செய்யுட்களை மேற்கோளாக எடுத்துக் காட்டல் இயலாமையும், அதனால் 'தமிழ்வரலாறுடையார்' கூற்றுப் பெரிது பிழைபடுவதாதலும், 697. கி. பி. 9-ஆம் நூற்றாண்டிற்கு முன் னிருந்தவரான உரையாசிரியர் இளம்பூரணர் தமது தொல்காப்பிய உரையில் திருச்சிற்றம்பலக்கோவையார் செய்யுட்களை எடுத்துக் காட்டாமை கொண்டு, மாணிக்கவாசகர் அவர்க்குப் பின்னிருந்தா ரெனக் கூறிய 'தமிழ்வரலாறுடையா'ரின் உரைப்பிழை; எல் லார்க்கும் பொதுவான இலக்கணநூலுரைகளை இயற்றிய தொல் லாசிரியர் ஒருசமயச் சார்பான நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடாமை; மாணிக்கவாசகர்க்குப் பின்னிருந்தவராகத் துணியப்படும் உரைகாரருந் தொல்காப்பிய உரைக்குத் திருச்சிற்றம்பலக் கோவை யாரிலிருந்து மேற்கோள்கள் எடுத்திலர்; 698, 699. திருவாசகந் திருக்கோவையாரில் எங்கும் யானைமுகக் கடவுளாகிய 'கணபதி' யைப் பற்றிய குறிப்பாதல் வணக்கமாதல் காணப்படாமை; யானை முகமுடைய பிள்ளையார் வணக்கங் கி. பி. 5-ஆம் நூற்றாண்டிற்கு முன் இல்லையாய் அதன் இறுதியிலிருந்து தோன்றினமைக்குச் சான்றுகள்; கி. பி. 2-ஆம் நூற்றாண்டிற்குமுன் இயற்றப்பட்ட பழந்தமிழ்ச் சங்கநூல்களில் எங்கும் பிள்ளையார் வணக்கங் காணப் படாமை; கி. பி. 6-ஆம் நூற்றாண்டி லிருந்துவந்த சைவசமய ஆசிரி

யரும் பிறரும் எல்லாம் யானைமுகப் பிள்ளையாரைக் குறிப்பிடுதலுந் தம் நூன்முகத்து வணங்குதலுஞ் செய்து போதரும் உண்மை; 700-702. மாணிக்கவாசகர் காலத்தில் தில்லைநகருக்கருகே நின்ற கடல், திருஞானசம்பந்தர் காலத்தே வற்றி எட்டிச்செல்ல அதன் மருங்கே உப்பங்கழி யிருந்தமையும், இஞ்ஞான்று அக்கழியும் இல்லையாய் அக்கடல் அந்நகருக்கு எழுகல் விலகிப்போய் விட்டமையும்; இவ்வாறு கடல்நீர் எட்டிச்செல்லுதற்கு வேண்டுங் காலக்கணக்கு; இங்ஙனமே, மாணிக்கவாசகர் குதிரைவாங்கச் சென்றகாலத்தில் திருப்பெருந்துறை யருகேநின்ற கடல், இப்போது அதனைவிட்டுப் பதினான்குகல் விலகிச்சென்ற காலஅளவை; இவ்வாற்றால் திருவாதவூரடிகள் கி. பி. மூன்றாம் நூற்றாண்டில், ஏனைமூவர்க்கு முன்னிருந்தவரென்பது; 703-706. திருமூலர் திருமந்திரத்திலும், ஏனை மூவர்தந் தேவாரங்களிலும் உள்ள சொற்கள், சொற்றொடர்கள், குறியீடுகள், பா அமைப்புகள், பொருள்கள் முதலியன ஒருசிறிதுந் திருவாசகந் திருக்கோவையாரிற் காணப்படாமையுந், திருவாசகந் திருக்கோவையாரில் உள்ள அவைகள் பலவுந் திருமந்திரந் தேவாரம் என்பவற்றிற் காணப்படுதலும்; திருவாசகமுந் திருமந்திரமுஞ் சைவசித்தாந்தக் கொள்கையளவில் ஒற்றுமையுடையவாயினும், மூலமலத்தின் பெயரான 'ஆணவம்' என்னுஞ் சொல்லுஞ், சுத்தமாயையின் பெயரான 'மாமாயை' என்னுஞ் சொல்லுந் திருமந்திரத்திற் காணப்படுமாறுபோலத் திருவாசகந் திருக்கோவையாரில் யாண்டுங் காணப்படாமை; 706-708. திருவாசகந் திருக்கோவையாரிலுள்ள சொற்கள், சொற்றொடர்கள், பொருள்கள் மூவர் தேவாரத்தில் அமைந்திருத்தற்கு எடுத்துக்காட்டுகள்; 709-718. திருவாசகந் திருக்கோவையாரிற் காணப்படுங் 'கட்டளைக் கலித்துறை' என்னுங் கலிப்பாவகையி லிருந்தே, தேவாரத்திலும் அதற்குப் பிற்காலத்து நூல்களிலும் பெரிது வழங்கும் 'விருத்தப்பா' தோன்றினமை; மாணிக்கவாசகர் அருளிச்செய்த நூல்வழக்குப் பண்டைத் தமிழ்வழக்கிற்கு அணுக்கமாய் நிற்றலுங், கி. பி. 6-ஆம் நூற்றாண்டிற் றோன்றிய 'சூளாமணிக்' காப்பிய காலமுதல் பண்டைத் தமிழ்வழக்கினின்று பெரிது விலகிய பின்றைத் தமிழ்வழக்குத் தோன்றுதலும்; கி. பி. 280-ஆம் ஆண்டுக்குப் பின் ஐந்தாம் நூற்றாண்டின் நடுவரையில் மதுரையிற் பாண்டியர் அரசு இல்லாமையின், அடிகள் அமைச்சராயிருந்தது கி. பி. 280-ஆம் ஆண்டுக்குமுன் அரசுபுரிந்த வரகுண

பாண்டியன் மகனது ஆட்சியிலாமென்பது; 718-720. கி. பி. 2-ஆம் நூற்றுண்டுக்குமுன் தமிழ்நாட்டிலிருந்த சிவபிரான் திருக்கோயில்கள் மிகச்சிலவேயாதலும், அதற்குப்பின் அவை வரவரப் பெருகலானமையும்; தமிழ்மூவேந்தரிற் சோழ அரசர்களே சிவபிரான் திருக்கோயில்களை வரவரப்பெருக்கினமை; மாணிக்கவாசகர் குறிப்பிட்ட திருக்கோயில்கள் 54; ஏனைமூவருங் குறிப்பிட்டவை 275; இவ்வாற்றுனும் அடிகள் காலங் கி. பி. 3-ஆம் நூற்றுண்டாதல்; 720-723. அறுபத்துமூன்று நாயன்மாருள் மாணிக்கவாசகராற் குறிப்பிடப்பட்டவர் இருவரேயாதலும், அப்பர் சம்பந்தராற் குறிப்பிடப்பட்டவர் பதினுல்வராதலுங், கி. பி. 6-ஆம் நூற்றுண்டில் இயற்றப்பட்ட 'கல்லாட' நூலிற் குறிப்பிடப்பட்டவர் நால்வராதலும்; 723-727. மாணிக்கவாசகர் பொருட்டு இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களைக் 'கல்லாட' நூல் எடுத்து நவின்றமை; இன்னோரன்ன பல ஏதுக்களால் மாணிக்கவாசகர் காலங் கி. பி. 3-ஆம் நூற்றுண்டின் முற்பாதிக்கண்ணதென்னும் முடிபு திண்ணமாய் நாட்டப்பட்டதென்னும் முடிபு, 728.

மாணிக்கவாசகர் கால முதற்பகுதிப் பொருளடக்கம், 1-18.

மாணிக்கவாசகர் காலங் கி. பி. 10-ஆம் நூற்றுண்டின் கண்ணதென்றும், இவர்க்கு ஒருநூற்றுண்டுபின்னே திருஞானசம்பந்தர் முதலான ஏனைமூவருந்தோன்றினரென்றும் போப்துரை கூறினமை; கடைச்சங்கத்தில் திருக்குறள் அரங்கேறிய கி. பி. முதல்நூற்றுண்டுக்குச் சிறிதுபின்னே மாணிக்கவாசகர் இருந்தாரென்று திருமலைக்கொழுந்துபிள்ளை கூறினமை; திருஞானசம்பந்தர் கி. பி. 7-ஆம்நூற்றுண்டிலிருந்தாரென்னுங் கல்வெட்டாராய்ச்சி வல்லார்கூற்றை யுடம்பட்டு, அவர்க்கும் அப்பர் சுந்தரர்க்கும் பின்னே மாணிக்கவாசகர் இருந்தாரென இன்ஸ்துரை மொழிந்தமை; இங்ஙனமே சுந்தரம்பிள்ளையும் ஐயுற்றமை; வரலாற்று நூலாராய்ச்சியில்லாத் தமிழ்ப்புலவர், திருஞானசம்பந்தர் 400) ஆண்டுகட்கு முன்னும், மாணிக்கவாசகர் சம்பந்தர்க்கு முன்னும் இருந்தாரெனக் கரைந்தமை; 1, 2. திருமுறை வகுப்புச் செய்த 'நம்பியாண்டார் நம்பி'களும், அதனைச் செய்வித்த 'இராசராச அபயகுலசேகர சோழ'னுங் கி. பி. 10-ஆம் நூற்றுண்டின் ஈற்றில் இருந்தமை; அதனுற் சமயாசிரியர் நால்வரும் 9-ஆம்

நூற்றூண்டுக்கு முற்பட்டவராதல்; 3, 4. சிறுத்தொண்ட நாயனர், 'முதலாம் நரசிம்மவர்ம'னுக்குப் படைத்தலைவராய், வடக்கே வாதாவி யாண்ட 'இரண்டாம் புலிகேச' அரசன்மேற் படையெடுத்துச் சென்று அவனையும் அந்நகரையும் அழித்த வரலாறு 'பெரியபுரா ணத்'திலுங் கல்வெட்டுகளிலுங் காணப்படுதல்; புலிகேச அரசன் இறுதிக்காலங் கி. பி. 642 என்பதூஉஞ், சிறுத்தொண்டரைத் திருச் செங்காட்டங்குடியிற் கண்டு அளவளாவிய திருஞானசம்பந்தர் கி. பி. 642-க்கு முன்னேயிருந்தா ரென்பதும்; முதல் நரசிம்மவர்மன் தந்தையான 'குணபாரன்' அல்லது 'முதலாம் மகேந்திரவர்மன்' என்பான் காலம் முதல் அப்பர் இருந்தமை; 4-7. அப்பர் குறித்தரு ளிய 'நரியைக் குதிரையாக்கிய திருவிளையாடல்' மாணிக்கவாசகர் பொருட்டே நிகழ்ந்ததென்பது; இவ்வாற்ருல் மாணிக்கவாசகர் காலங் கி. பி. 6-ஆம் நூற்றூண்டிற்கு முற்பட்டதாதல்; 8-10. திரு வாசகந் திருக்கோவையார் என்பன கடைச்சங்ககாலத்து நூல்கள் ஆகாமைக்குச் சான்றுகள்; அடிகளே கடைச்சங்ககாலந் தமக்கு முற் பட்டதென்பது போதர அருளிச்செய்தமை; அதனுலுந் திருவாச கச் செய்யுள் வழக்காலும் அடிகள் காலங் கி. பி. 3-ஆம் நூற்றூண் டாதல்; 'கல்லாடநூல்' கடைச்சங்ககாலத்தது ஆகாமை; அங்ஙன மே, அது மூவர் காலத்திற்குப் பிற்பட்டதூஉம் ஆகாமை; அக்கல் லாடநூலிற் குறிக்கப்பட்ட திருவிளையாடல்கள்; 10-14. அப்பருஞ் சுந்தரரும் மாணிக்கவாசகரை வெளிப்படையாகக் கூறுமற் குறிப் பாற் கூறிய காரணம்; வீரசைவர்கள் மாணிக்கவாசகரை முதலாசிரி யராய் வைத்துத் தொன்றுதொட்டு வழிபட்டுவரும் இயல்பு; பழைய சங்கநூலாகிய 'திரிகடுகத்'தில் வீரசைவர்கள் 'இலிங்கிகள்' என வழங்கப்பட்டமை; நம்பியாண்டார் நம்பிகள் 'திருவாசகந் திருக் கோவையாரை' ஒன்பதாந் திருமுறையாகக் கோத்தமை; திருவாச கந் திருக்கோவையா ரென்பன தமிழ்த் தொன்மைவழக்கே தழீஇ யினவாதலுந், தேவாரந் தமிழ்ப்புதுவழக்கே தழீஇயினவாதலும்; அதனுல் திருவாசகந் திருக்கோவையாரும் அவைதம்மை அருளிச் செய்த மாணிக்கவாசகருங் கடைச்சங்க காலத்தை யடுத்த கி. பி. 3-ஆம் நூற்றூண்டிலிருந்தா ரென்னும் முடிபு; 14-18.

———

மாணிக்கவாசகர் காலம் இரண்டாம்பகுதி, 1-28.

கோபிநாதராவ் என்பார் எழுதிய மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சி பிழை மலிந்திருத்தல்; 1. நரிபரியாக்கிய திருவிளையாடல் தம் பொருட்டே நிகழ்த்தப்பட்டதென அடிகளே பலவிடத்துந் திருவாசகத்தில் அருளிச்செய்தமை; 2-4. "நரியைக் குதிரை செய்வானும்" என்னுந் திருப்பாட்டில் மாணிக்கவாசகர் பொருட்டும், ஏனையடியார் சிலர்பொருட்டும் இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களை அப்பர் தொகுத்தருளிச் செய்தமை; 5. கல்வெட்டுகளில் திருவாதவூரடிகள் பெயர் காணப்படவில்லையென்ற ராவ் 'திருவலஞ்சுழிக்' கல்வெட்டு ஒன்றில் அவரது பெயர் காணப்படுகின்றதென முன்னொடுபின் முரண உரை நிகழ்த்தினமை, 6, 7. பழந்தமிழ் மன்னர் வரலாறுகளும் புலவர் வரலாறுகளும் பழந்தமிழ் நூல்களாலன்றிக் கல்வெட்டுகளால் அறியப்படாமை; பண்டைக்காலத்திற் கல்வெட்டுகள் இல்லாமைக்குக் காரணம்; 7, 8. மாணிக்கவாசகர் இருந்த காலத்தில் திருப்பெருந்துறையிலுந் திருவுத்தரகோசமங்கையிலுஞ் சிவபிரான் திருக்கோயில்கள் இல்லாமை; மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் திருக்கோயில் எடுப்பித்தாரென்பதும் பொருந்தாமை; திருவுத்தரகோசமங்கையும் அத்தன்மையதே; அப்பர் சம்பந்தர் சுந்தரர் காலத்தும் அவ்வூர்களில் திருக்கோயில்கள் இருந்திலவென்பது; நால்வர்க்கும் பின்னேதான் அங்குத்திருக்கோயில்கள் உண்டாயினமை; 9-16. அடிகள், சம்பந்தரையுஞ் சுந்தரரையுந் தாமருளிச்செய்த 'திருவாசகத்'திற் குறிப்பிட்டாரென்ற ராவ் உரை பொருந்தாமை; அடிகள் குறித்ததெல்லாந் தங் குருநாதனுடன் போந்த அடியார்களையேயாதல்; 17-19. ஏனை மூவரினும் பார்க்க அடிகளே திருவிளையாடல்களை மிகவெடுத்துக் கூறினரென்ற ராவ் உரையும் வழுவாதல்; அப்பர் சம்பந்தரே திருவிளையாடல்களை மிகவெடுத்துரைத்தன ரென்பது; 19-20. கி. பி. 904-இல் அரசு செலுத்திய 'பராந்தகச்சோழன்' தில்லைச்சிற்றம்பல முகட்டுக்குப் பொற்றகடு வேய்ந்தபிறகே, தில்லையம்பலம் 'பொன்னம்பலம்' எனப் பெயர்பெற்றதென்ற ராவ் உரையின் பிழை; அப்பர் அருளிய திருப்பாட்டுகளிற் போந்த "பொன்னம்பலம்" எனபதற்குப் 'பொன்போன்ற அம்பலம்' எனப் பொருளுரைத்தல் பிழைபடுதல்; பண்டுதொட்டே தில்லையம்பல முகடு பொற்றகடு வேயப்பட்டுவந்ததென்பது; 20-22. 'தக்ஷிணாமூர்த்தியுபாசனை' மாணிக்கவாசகர்க்குப் பின் உண்டாயதென்பதும் பிழை

யாதல், 23. தில்லையம்பலத்தே மாணிக்கவாசகர்க்கும் புத்தர்க்கும் வழக்கு நடந்ததன்று, அவ்வவையில் வந்திருந்த சோழமன்னற்குப் பாண்டிய அரசன் திறைகொணர்ந்து செலுத்தினனென்ற ராவ் கூற்று முழுப்பொய்யாதல், 23, 24. மாணிக்கவாசக சுவாமிகள் குறித்த 'வரகுணபாண்டியன்' கி. பி. 9-ஆம் நூற்றாண்டின்கண் இருந்தானென்னும் ராவ் உரை பொருந்தாமை; 24-25. புத்தமதங் கி. பி. 9-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரும் இருந்ததென்பதனால் மாணிக்கவாசகர் காலம் அவ்வொன்பதாம் நூற்றாண்டுக்குப் பின்னை யதென்றல் ஆகாமை, 25, 26. மாணிக்கவாசகர் கி. பி. 6-ஆம் நூற்றாண்டிற்கு முன் கி. பி. 3-ஆம் நூற்றாண்டில் இருந்தாரென்னும் முடிபு, 27. 'திருப்பெருந்துறை'யைப் பற்றிய குறிப்பு அப்பரடிகள் திருப்பதிகத்திற் காணப்படுதல், 28.

பிழைதிருத்தம் இறுதியில் உளது.

மாணிக்கவாசகர் வரலாறு

பக்.	வரி.	பிழை	திருத்தம்
5	23	கருதிக்	கருதித்
8	,,	புலிபூர்நம்பி	புலியூர்நம்பி
10	7	அறிவுறுக்கும	அறிவுறுக்கும்
12	26	யுருசினர்	யுருகினர்
15	2	இனி	இனிக்,
17	10	நெஞ்சுடர்	செஞ்சுடர்
30	18	அவரெல்லாரும்	அவரெல்லாரும்
36	30	அவனைச்	அவரைச்
46	10	மெய்க்காப்பாளரை	மெய்காப்பாளரை
46	12	'‘நேற்று	‘‘நேற்று
49	20	அசன்றன்	அரசன்றன்
51	13	வகுத்துவ	வருத்துவ
64	8	விட்டார்	விட்டது
66	6	அதண	அதன்
75	11	இல்லையானுலுல்	இல்லையானுலும்
76	14	ராயிரத்து	ராயிரத்து
82	2	அவர்க்கு	அவற்கு
87	5	எலலா	எல்லா
92	6	உலகங்களில	உலகங்களில்
,,	2	இலக்கண	இலக்கணங்
,,	15	காணல	காணல்
94	4	ரூேன்றி	ரூேன்றிப்
98	17	வீடுபேறும	வீடுபேறும்
108	11	கழுவிலேறறு	சழுவிலேற்று
137	9	விளங்கள்	விளங்கல்
143	9	அறுத	அறுத்
144	14	உண்ணுங்கால்	உண் ணுங்கால்
145	4	ஒழுக்கா	இழுக்கா
,,	17	ஜம்புலங்களையும்	ஐம்புலங்களையும்
,,	22	அடக்கிக்கொள்ளுல்	அடக்கிக்கொள்ளுதல்

150	21	ணுப் பரவி	ணும் பரவி
162	4	கவிவெண்பா	கலிவெண்பா
,,	20	சென்று.	சென்று,
,,	27	ரெலலாம்	ரெல்லாம்
163	20	உள்ளாரெல்	உள்ளாரெல்

மாணிக்கவாசகர் காலம் (3-ம் பகுதி.)

7	23	வாசகனுகக்	வாசகனுக்
11	9	ராயினதனுல்	ராயினரதனுல்
12	3	எனவும்	எனவும்,
15	5	' கலித்தொகையுரை '	'கலித்தொகையுரை',
23	11	அல்வாறு	அவ்வாறு
,,	26	ஆட்கமாடத்	ஆடகமாடத்
27	28	சிவஞானயோகிகள்	சிவஞானயோகிகள்.
43	4	யாய்பருங்கலம்	யாப்பருங்கலம்
,,	25	கலிக்துறை'	கலித்துறை'
44	24	பழை	பழைய
47	27	எண்ணூற்றுப்	எண்ணூற்றுப்
60	18	தென்றெனக்	தெற்றெனக்
68	4	கி. மு. முதல்நூற்றுண்டின்கணிருந்த நக்கீரராலும்	கி. பி. முதல்நூற்றுண்டின்கண்ணும் ஐந்தாம் நூற்றுண்டின்கண்ணும் இருந்த இருவேறு நக்கீரராலும்
101	25	திருவிலையாடலை'யுங்	திருவிளையாடலை'யுங்
106	15	இரண்டாம் விக்கிரமாதித்தியன்'	'இரண்டாம் விக்கிரமாதித்தியன்'
113	31	அரிமர்த்தனன்',	'அரிமர்த்தனன்',
115	22	கலலை	கல்லை
121	30	தேவரம்	தேவாரம்
125	8	திருவிளையாடலையையா	திருவிளையாடலையா
128	8	பில்	யில்

128	9	எல்லார்க்குப்	எல்லார்க்கும்
,,	16	இங்ஙனக்	இங்ஙனங்
,,	18	தமிரசர்	தமிழரசர்
134	21	புராணம்	புராணம்
144	2	தொழில்புரியம்	தொழில்புரியும்
,,	21	இவ்	——
,,	30	நுதர்தற்குப்	நுகர்தற்குப்
147	18	நல்லாசியரான	நல்லாசிரியரான
153	7	ஒன்றும்	'ஒன்றும்
,,	8	மெய்பொரு	மெய்ப்பொரு
157	2	முதற்சண்	முதற்கண்
158	2	பெம்மான்மையும்	பெரும்பான்மையும்
,,	19	ஒளியிலலாத	ஒளியில்லாத
160	9	முதலவன்	முதல்வன்
,,	30	சூத்திரம	சூத்திரம்
161	5	அருனிய	அருளிய
169	11	சிவத்தினியில்பிற்கு	சிவத்தினியல்பிற்கு
171	30	அறிஞரார்	அறிஞராற்
173	16	காட்டவே'	காட்டவே,
,,	17	'திருமந்திரம்,	'திருமந்திரம்'
175	2	செயக்கடவுனமாய	செயக்கடவனவுமாய
187	6	மாணிக்கவாசசர்	மாணிக்கவாசகர்
189	9	திருமூலர் இருந்த ஆறும் நூற்றூண்டிலாதல், அதற்குச் சிறிது முந்தியாதல் திவாகர நிகண்டு இயற்றப் பட்டதாகல் வேண்டும்.	திருமூலர் இருந்த ஆறும் நூற்றூண்டிற்கு மிகப் பின்னே பத்தாம் நூற்றூண்டில் திவாகர நிகண்டு இயற்றப்பட்டதாகல் வேண்டும்.
192	15-16	இருபத்துமூன்று	இருபத்தேழு
,,	22	இயற்றின தனை	இயற்றினதனை
198	29	முறையில	முறையில்
203	27	அரசர்களும்	அரசர்களும்,
203	16	என்றும்	என்றும்,
209	21	ஒப்பவே	ஒப்பவே,

213	1	மாணிக்கவாகர் சகாலம்	மாணிக்கவாசகர் காலம்
214	25	உணர்ந்துகொள்க	உணர்ந்துகொள்க.
226	10	செய்பப்பட்டமை	செய்யப்பட்டமை
232	23	எடுத்துைரக்கும	எடுத்துரைக்கும்
233	4	நக்கீரனுர்க்கு ஆயிரத்து	நக்கீரனுர்க்குமூவாயிரத்து
236	29	Inbia	India
255	19	அன்றிக்கே	இன்றிக்கே
260	28	என்மலைகள்	என்மலைமகள்
267	28	தனிப்பெருக்	தனிப்பெருங்
268	7	இற்ப்பொடு	இறப்பொடு
271	31	அவவுருவின்	அவ்வுருவின்
274	10	உணர்ந்துகொளக	உணர்ந்துகொள்க.
292	28	பழித்து	பழித்துப்
294	26	‘திருவிண்ணகர்’	——
306	10	இடங்களுள் யாண்டும்	இடங்களுட் கபிலரது குறிஞ்சிக் கலிப்பாட்டு ஒன்றிற்றவிர வேறு யாண்டும்
,,	14	கி. பி.	கி. மு.
,,	17	எனவே, கி. பி. மூன்றும்	எனவே, கி. பி. முதல் நூற்றுண்டிலிருந்த கபிலர், கி. பி. மூன்றும்
,,	18	பெருமான் காலந்தொட்டு	பெருமான் முதலியோர் காலந்தொட்டு
315	21	இங்குதெரி	இங்குத் தெரி
323	22	வாரலாற்றினை	வரலாற்றினை
331	8	எட்டுணையாயினுக்	எட்டுணையாயினுங்
333	7	கடைப்பிடிக்க,	கடைப்பிடிக்க.
334	12	எசக	எசுக
,,	21	திறைசெலுத்தி	திறைசெலுத்தித்
335	4	புலியூர்ச்	புலியூர்ச்
340	28	பாரதகதை	பாரதக்கதை
,,	31	மலர்வனம்புக்காதை	மலர்வனம்புக்க காதை,

343	14	நூல்லகளிற்	நூல்களிற்
349	30	anb	and
356	21	பெறற்கரி	பெறற்கரிய
360	24	அதர்வேதத்திலும்	அதர்வவேதத்திலும்
362	14	வேளவிகட்கு	வேள்விகட்கு
367	30	''தழுவிய	தழுவிய
374	3	'இராவகன்'	'இராகவன்'
382	28	கண்ணும்	கண்ணும்
383	18	வெண்பாப்பின்	வெண்பாயாப்பின்
,,	20	நிற்றலும்.	நிற்றலும்,
392	28	வயிலில்	வயலில்
397	10	புராணகதைகளான்	புராணகதைகளான்
398	14	கொடாமை	கெடாமை
403	5	காட்டுதும்,	காட்டுதும்.
,,	28	ஊயுணர்வும்	ஊயுணரும்
409	27	காரிகை''காரரால்	காரிகைக்''காரரால்
412	2	பளளித்துஞ்சிய	பள்ளித்துஞ்சிய
430	17	அவ்விரண்டுள்ளுங்	அவ்விரண்டுள்ளும்
439	14	துஞ் சியநன்மாறனை'	துஞ்சியநன்மாறனை'
444	28	முறையனுகற்பாலனவே	முறையனுகற்பாலனே
453	16	ஒரோவொருகாலன்றி	ஒரோவொருகாலன்றி
455	11	இருக்கை	இருகை
467	16	அரசர்	அரசர்
468	18	உரைபகத்தே	உரையகத்தே
,,	20	கொணடும்	கொண்டும்
471	24	இன்னேரென்ன	இன்னோரன்ன
484	23	ஓராயிர	ஓராயிர
485	18	தேவர்மேல	தேவர்மேல்
486	15	தண்டமிழ்	தண்டமிழ்
,,	31	தோற்றத்திற்கட் புலனும்	தோற்றத்திற் கட்புலனும்
498	18	தமிழிரிலேயே	தமிழரிலேயே
,,	20	பேரிடுக் கண்கள்	பேரிடுக்கண்கள்
505	7	பாப்பன	பார்ப்பன
506	23	மேலானவாயிருத்தலையும்	மேலனவாயிருத்தலையும்

521	15	வைசிரியரெனத்	வைசியரெனத்
550	4	இடைவகையாலும்	இடவகையாலும்
561	16	என்வும்,	எனவும்,
563	25	நூாற்பொருளை	நூற்பொருளை
564	11	அரசனால்	அரசனால்
,,	25	புரைபட்டொழிந்	புரைபட்டொழிந்
565	20	தெல்பாலி	தென்பாலி
598	10	பொருடருவதாகும்	பொருடருவனவாகும்
607	23	எழில்நலங்	எழில்நலங்
608	4	தொகை	தொகை,
618	7	கொள்ளப்பட்டதன்றே	கொளப்பட்டதன்றே
625	5	வேண்டுழிக்	வேண்டுழி
633	19	லரலாறுகளை	வரலாறுகளை
641	14	திருத்தொண்டதொகை	திருத்தொண்டத்தொகை
647	6	செப்யப்பட்டுத்	செய்யப்பட்டுத்
652	20	தடிழ்நாட்டிலிருந்த	தமிழ்நாட்டிலிருந்த
656	13	ஒருவைா	ஒருவரை
658	21	சம்பந்தரிடத்துப்பொல	சம்பந்தரிடத்துப்போல
660	18	பழுதில்பெகுந்	பழுதில்பெருங்
661	13	பெகுமானை	பெருமானை
664	20	சிவபிரானருளாற்	சிவபிரானருளால்
669	26	தொண்டிஞுண்	தொண்டினுண்
673	4	அவரைத்	அவ்வரைத்
677	13	நிகழ்ந்ததாகல்	நிகழ்ந்தனவாகல்
678	26	ருத்	குத்
679	16	முயற்கியைக்	முயற்சியைக்
684	9	நெஞ்சக்குழைந்	நெஞ்சங்குழைந்
,,	10	திகுக்கொங்கைகளிற்	திருக்கொங்கைகளிற்
690	4	சாண்க,	காண்க.
,,	5	வீரசைவ	வீரசைவக்
,,	23	வழுத்துாைகளாகவே	வழுத்துரைகளாகவே
701	29	இத்தென்றிமிழ்	இத்தென்றமிழ்
702	15	பிள்ளையாரைத்	பிள்ளையாரைத்
,,	30	பெற	பெறப்

702	31	ப்படுமென்க.	படுமென்க.
703	15	வாழ்வயற்றிற்லை''	வாழ்வயற்றில்லை''
704	2	மேலே இருந்தமை	இருந்தமைமேலே
705	11	இஞ்ஞர்ன்று	இஞ்ஞான்று
706	22	எடுக்தாளாதிரார்	எடுத்தாளாதிரார்
709	15	பேரருளின்பம்	பேரருளின்பம்
712	14	உசஉ	உசஉ
714	14	திருப்பதிகக்தின்	திருப்பதிகத்தின்
715	7	முயையே	முறையே
717	14	திருத்தாணடகப்	திருத்தாண்டகப்
718	27	அதற்கு வழங்சிய	அதற்கு வழங்கிய
719	28	மூண்றும்	மூன்றும்
720	24	எத்துனை	எத்துணை
725	16	சண்டீசாயனர்	சண்டீசநாயனர்
728	4	இம்மூவரைத்	இம்மூவரைக்
254	24	நீர்படுத்து	நீர்ப்படுத்து
295	6	பெருபாலனவற்றை	பெரும்பாலனவற்றை

மாணிக்கவாசகர் காலம் (முதற்பகுதி)

8	18	யுன்பொருளே''	யுன்பேருளே''
10	7	துணியப்படும்	துணியப்படுதல்
11	26	பரிமேலழகியார்	——
12	12	பேராசிரியர்	பேராசிரியர்

மாணிக்கவாசகர் காலம் (இரண்டாம்பகுதி).

1	6	சந்தரமூர்த்திகள்	சுந்தரமூர்த்திகள்
3	16	நரிகளெல்லால்	நரிகளெல்லாம்
8	9	சாலத்	காலத்
,,	22	அல்ல தூ உம்	அல்லதூஉம்
9	2	பட்வில்லை	படவில்லை
,,	9	இவ்வற்புத	இவ்வற்புதத்
,,	18	அவ்வர்கள்	அவர்கள்
10	10	தென்னஞ்சோலைகளுங்	தென்னஞ்சோலைகளும்

11	7	'மலர்மாலையினாலும்.	'மலர்மாலையினாலும்,
,,	20	புராணத்தின் கண்	புராணத்தின்கண்
13	8	மென்றார்"	மென்றார்"
14	5	தோன்றும்	தோன்றும்,
,,	25	மெயய்ப்பொருள்	மெய்ப்பொருள்
15	23	வாணிக்கவாசகர்	மாணிக்கவாசகர்
16	15	பிற்காலத்தின் கண்	பிற்காலத்தின்கண்
18	15	"போரா	"பேரா
,,	20	என்றும்,	என்றும்
19	14	வேப்பத்தூரார்	வேம்பத்தூரார்
20	7	,,	,,
27	6	மாணிக்ந	மாணிக்க

சிவன்றன் நீர்வணங்கும் முழுமுதற்கடவுளோ! அழகிது! அழகிது' என்று எள்ளனஞ்செய்கின்றனர். போலிச்சைவர்களால் இங்ஙனஞ் சைவசமயத்திற்கு வரும் ஏதங்கண்டு, "சைவசமயாசிரியர்கள் தழுவிக்கூறிய ஆரியவேதங்களென்பன இருக்கு எசுர் முதலிய இந்நான்கும் அல்ல; தமிழ் வேந்தர்களும் முனிவர்களும் அருள்வழிநின்று ஆரியமொழியில் அருளிச்செய்த உபநிடதங்கள் சிலவே அவையாம்" என்றுயாம் ஆழ்ந்தாராய்ந்து, எம்முடைய பண்டைக்காலத் தமிழர் ஆரியர், வேளாளர் நாகரிகம், சாதிவேற்றுமையும் போலிச்சைவரும், மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் என்னும்நூல்களில் விரித்து எழுதியும், அவைதம்மை ஒருசிறிதும் உணர்ந்துபாராத போலிச்சைவர்கள், 'இவர் சைவவரம்பை அழிக்கின்றார்!' என்று எம்மேற் சீறிப் பாய்கின்றார்கள். எம்மேற் சீறும் இப்போலிகள், புறச்சமயத்தாரும் புது இயக்கக்காரரும் இவர்தம் பாழ்த்தஉரைகொண்டே சைவசமயத்தை இழித்துப்பேசுதற்கெல்லாம் வகைசொல்லமாட்டாமல் வாயடங்கி நிற்றலென்னை? மாணிக்கவாசகர் திருஞானசம்பந்தர் அப்பர் சுந்தரர் முதலான தெய்வஅருளாசிரியர் அருளிச்செய்த தேவார திருவாசகங்களில் 'வேதம்', 'மறை' என்னுஞ்சொற்களாற் குறிக்கப்படுவனவெல்லாம் இருக்கு, எசுர், சாமம், அதர்வம் என்னும் ஆரிய நூல்களேயாகும் என அலறித்திரியும் போலிச்சைவப்புலவர்கள், 'குடியும் உயிர்க்கொலையுஞ் சூதுங் காமவெறியுஞ் சிறுதெய்வவணக்கமும் மலிந்த இவ்வாரியநூல்களை ஒப்புக்கொண்ட நும் சமயாசிரியர் அக்குடிகொலை முதலான கொடுந்தீய ஒழுக்கங்களை ஒப்புக்கொண்டாரல்லரோ?' எனப் புதுஇயக்கக்காரர் கேட்குங் கேள்விக்கு விடைசொல்லமாட்டாமற் கலங்கி வீணே அவரை வைது ஒளித்தல் என்னை? தேவார திருவாசக ஒருதெய்வச்செந்தமிழ்மறைப் பொருள்கட்கும் அவ்வாரியச்சிறுதெய்வ நூற்பொருள்கட்கும் ஒற்றுமையுள வேற்காட்டுக என்று சைவமெய்ச்சான்றோர்கள் கடாவுங் கடாக்கட்கு விடையிறுக்கமாட்டாத சைவப்போலிகள், பிடிதிருநீறும் படிஉருத்திராக்கமுமணிந்து கொண்டு, சிறுதெய்வவெறியாட்டுப்பாட்டுகள் நிறைந்த இருக்கு எசுர் முதலான ஆரியநூல்களையே சமயகுரவர்கள் 'மறைகள்' 'வேதங்கள்' என்றாரெனத் தேவார திருவாசகங்களில் அச்சொற்கள் வந்த தொடர்களைப் பக்கம் பக்கமாக அட்டவணையிட்டுக்காட்டிச், சிவபெருமானை அச்சிறுதெய்வங்களினுஞ் சிறியராக்கிக் கொடுந்தீவினைக்கு ஆளாகுதல் என்னை? பிறப்பு இறப்பு இல்லாத் தனிமுதற்கடவுளான சிவத்தையன்றி வேறெதனையுங் கனவிலும் நினையாத சைவசமயாசிரியர்கள், பிறப்பு இறப்புக்களிற் கிடந்துழன்று இழிந்த மக்களுஞ் செய்யாத கொடுந்தீவினைகளைச் செய்த இந்திரன் முதலான தேவர்களையும் அவர்கள்மேற் பாடப்பட்ட பாட்டுகளையும் 'வேதம்', 'மறை' எனக் கொண்டாடுவரோவென்று யாங் கடாவினால், அதற்கு விடைசொல்லமாட்டாது "பட்டுக்கோட்டைக்கு வழியாது? என்று வினவினாற்குக் கொட்டைப் பாக்குத் துட்டுக்கு எட்டு" என்று விடையிறுத்தாரோடொப்பச், சமயகுரவர்கள் 'இருக்கு எசுர் முதலியவற்றையே சிவபிரான் திருமொழி என்று அருளிச்செய்தார்கள்' எனக் கரையாநிற்கின்றனர். இருக்கு முதலிய ஆரிய நூல்களிற் சிவபிரான்மேற் பாடப்பட்ட பதிகங்கள் எத்தனை? ஏனைச் சிறுதெய்வங்கள்மேற் பாடப்பட்டன எத்தனை? என்று யாம் கடாவினால், அதற்கு விடைசொல்ல அறியாது, சிறுதெய்வங்கள்மேற் பாடப்பட்டனவுஞ் சிவபிரான்மேற் பாடப்பட்டனவேயாம் என்று அங்ஙனமே அவர் பொருந்தாவிடை கூறுகின்றனர். சிறுதெய்வப் பெயர்களெல்லாஞ் சிவபிரான் பெயர்களேயாதல் உண்மையென்றாற், கேநோபநிடதத்தில் இந்திரன் முதலிய தேவர்கள் இயக்கவடிவிற் றோன்றிய சிவபிரானை அறிந்திலரென நுவலப்பட்டதும், "மூவரும் முப்பத்துமூவரும் மற்றொழிந்த, தேவருங் காணாச் சிவபெருமான்' எனவும் "நூறுகோடி பிரமர்கள் நொந்தினார், ஆறுகோடி நாராயணர் அங்ஙனே, ஏறுகங்கை மணலெண்ணில் இந்திரர், ஈறிலாதவன் ஈசன் ஒருவனே" எனவும் சைவாசிரியர் தந் திருவாசக தேவாரச் செந்தமிழ்மறையிற் கூறப்பட்டதும் என்னையென்று யாம் கடாவினால், அதற்கு விடைசொல்லமாட்டாமல் விழிக்குஞ் சைவப்போலிகள், கற்றறிவில்லாச் சைவர்குழுவிற் சென்று 'சிவபிரான் அருளிச்செய்த ஆரிய வேதங்களை மறைமலையடிகள் இகழ்கின்றார்' எனக்

கரந்து அவரைத் தம் பொய்யுரையால் மயக்குகின்றனர். இருக்கு முதலான ஆரியச் சிறுதெய்வ நூல்கள் சைவசமய நூல்களேயாதல் உண்மையாயின், சைவசமயத்திற்குச் சிறந்த கொல்லா அறமும், திருநீறு உருத்திராக்கம் முதலான சிவ அடையாளமும், சிவாயநம என்னும் ஐந்தெழுத்து மந்திரமும், உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் என்னுஞ் சிவமூர்த்தங்களும், சிற்றம்பலங் கூடலாலவாய் முதலான சிவபிரான் திருக்கோயில்களும், சுத்தமாயை அசுத்தமாயை, வினை, ஆணவம் என்னும் மும்மல இலக்கணங்களும், சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்தி சிவம் என்னும் ஐந்து சுத்தமாயா தத்துவங்களும், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் மூவகை ஆருயிர்ப் பாகுபாடுகளும், வைரவன் வீரபத்திரன் விநாயகன் சுப்பிரமணியன் முதலான சிவபிரான் திருப்பெயர்களும், நீர் வேதம் வேதம் எனக்கூவும் இருக்கு நூலின்கண் ஓர் எட்டுணையுங் காணப்படாமை யென்னை? என்று யாம் கடாவினால், அதற்கு விடைசொல்ல அறியாமற் கலங்குஞ் சைவப்போலிகள் வெறுங் குருட்டுத்தனமாய் அலறிக்கூவும் பொருளில் மொழிகளையே சைவசமய உண்மைகளாகக் கருதிக்கொண்டு, உண்மைச் சைவநூலுணர்ச்சி சிறிதும் இல்லாப் போலிச் சீர்திருத்தக்காரர்களும் சைவசமயத்தைத் தமக்குத் தோன்றியவாறெல்லாம் புறம்பழித்துப் பேசியும் எழுதியும் வருகின்றார்.

இனிப், புராணங்கள் என்பன இறைவன்றன் வரம்பிலாற்றலையுந், தன்னை நினைந்துருகும் அடியாரைக் காத்தற்கு அவன்செய்த அருட்டிறங்களையும் உயர்ந்த அறிவுஇல்லாப் பொதுமக்கட்கு உணர்த்தல்வேண்டி இரக்கமுள்ள சான்றோராற் கட்டிவைக்கப்பட்ட பழையகதைகளையுடையனவாகும். இவ்வாறு ஆக்கப்பட்டகதைகள் பண்டைக்காலத்தில் மிகச்சிலவேயாகும்; பிறகு, எல்லாம் வல்ல கடவுளை வணங்குதற்குத்தக்க பேரறிவும் பேரன்பும் வாயாதவர்கள் தம்மோடொத்த மக்களைக் கடவுளாகப் பிழைபடக்கருதி, அவர்தம்மைத்தாம்வணங்குதல்போல மற்றைப்பொதுமக்களும் வணங்குமாறு செய்தற்பொருட்டு, முழுமுதற் கடவுளை மக்கள்நிலைக்குத்தாழ்த்தியுந் தாம்வணங்கத்துவங்கிய மக்களைக் கடவுள்நிலைக்கு உயர்த்தியுங் கடவுள்நிலைக்கு மாறான பலகட்டுக்கதைகளைக் காலங்கடோறும் புதியபுதியவாய் உண்டாக்கி, அவைகளையும் புராணங்கள் என்னும் பெயரால்வழங்கவிட்டனர். ஆகவே, கடவுளின் உண்மை இலக்கணங்களைக் கதைகளின் வாயிலாக விளக்கும் பழையஉண்மைப் புராணங்கள் சிலவாயிருப்பக், கடவுள்நிலைக்கு மாறானகதைகள் மலிந்தபுராணங்கள் வரவர மிகப்பெருகலாயின. இறைவன் முப்புரங்களை அழித்தகதையுந், காமனை எரித்து அம்மையைமணந்து உலகியலொழுக்கத்தை நிலைபெறுத்தினகதையுங், காலனைக்காய்ந்தகதையும், நான்முகன் திருமால்கொண்ட செருக்கை அடக்கினகதையும், அவர்நடுவே அடிமுடியில்லாத் தழற்பிழம்பாய்நீண்டகதையும், எல்லாஉலகமும்மடிந்த சுடுகாட்டின்கண் ஆடினகதையும், இறைவன் இல்லையென்று மறுத்துத் தாருகவன முனிவர்வேட்ட வேள்வியினை அழித்தகதையும், இன்னும் இவைபோல்வன சிலவும் எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளின் உண்மையையும் அருளிரக்கத்தையும் ஏழைமக்கட்கு இனிது விளக்கிக்காட்டுஞ் சிறந்த பழங்கதைகளாகும். மற்றுக், கந்தன்கதை, விநாயகன்கதை, காளிகதை, கண்ணன்கதை, இராமன்கதை போல்வனவெல்லாம், முழுமுதற் பழங்கடவுளாகிய சிவத்தைஇழித்துத், தாந்தாம் பாராட்டியமக்களை உயர்த்தல்வேண்டிப் பின்வந்தோர் காலங்கடோறுங் கட்டிவிட்ட புதுபுதுக்கதைகளேயாகும். இவ்விருவேறு கதைத்தொகுதிகளில், முன்னுள்ளவைகளே இறைவன்றன் அருள்ஆற்றல்களை விளக்குஞ் சிறப்பும் பயனும் உடையன; பின்வந்தவைகளோ முழுமுதற்கடவுளாம் அம்மையப்பரை மக்கள் வணங்கவொட்டாமற் றடைசெய்தலுடன், அவர் தம்போன்றமக்களையே வணங்கி, ஒருகுருடனும் அவனுக்கு வழிகாட்டச்சென்ற மற்றொருகுருடனும் ஒருங்குசேர்ந்து ஒருபெரும்படுகுழியில் வீழ்ந்தாற்போல, அவர்தாமுந் தீவினைப் படும்பள்ளத்தில் வீழ்ந்தாழுமாறு செய்வனவாகும்.

(தொடரும்)